


1947
GREETINGS

PHYNAZOL



The Ideal

SOLID DISINFECTANT

பினைசால்-வீடுகள், ஆஸ்பத்திரிகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள், சினிமா தியேட்டர்கள், சிற்றுண்டிச் சாலைகள் முதலிய இடங்களுக்கு மிகவும் இன்றியமையாதது.

இருமிகள், பூச்சிகள், ஈக்கள், கரப்பு முதலியவற்றை அறவே ஒழிக்கவல்லது. மற்றெவ்வித இரும நாசன திராவகத்தைக் காட்டிலும் ஐம்பது பங்கு வீரியமும், அடக்க சக்தியும் வாய்ந்தது. சுலபமாக ஓரிடத்திலிருந்து கொண்டுபோக மிகவும் சுலபமானது. தண்ணீரில் எளிதாகக் கரைவதுடன் இனிய மணமும் உள்ளது.

½ பவு. ரூ. 1-12-0. 1 பவு. 3-4-0
5 பவு. ரூ. 15-8-0. 10 பவு. 30-8-0
50 பவு. பவுண்டு ரூ. 3 வீதம்
உலோக டின்களில் கிடைக்கும்.

D. D. T. டின் ஒன்றுக்கு ரூ. 2/8 வீதம்
8 அவுன்ஸ் டின்களில் கிடைக்கும்

பினைசால் பெங்களூர் பப்ளிக் ஹெல்த் இன்ஸ்டிட்யூட் பெக்டீரியோலோஜிகல் டிபார்ட்மெண்டாரால் பரிசோதிக்கப்பட்டு பூரண திருப்திக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

R. W. Co. நிறமை 5 லிருந்து 6 வீதமும் நிரந்தர எமல்ஷனும் கூடியது.

பூரா விவரங்களுக்கு:

The
INDIA WATERPROOFING & DYEING WORKS
60-2, DHARAMTALA STREET, CALCUTTA
PHONE CAL. 448 GRAM TEXOLQUINO

டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: மைசூர், கூர்க்குக்கு
மெஸர்ஸ் ரகுலால் & கோ., மைசூர்
மலபார், கொச்சி, திருவாங்கூர், கோயமுத்தூர், வையநாடு, நீலகிரி ஜில்லாக்களுக்கு
மெஸர்ஸ் டி. ஸ்டேன்ஸ் & கோ., லிமிடெட், கோயமுத்தூர்.



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவை புரிந்து நம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோக நிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

FASTEEN'S 3/4

கேஸரி குடீரம் லிமிடெட்
மதராஸ்

ஒரிஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு

ஏஜண்டுகள்:

ஸ்ரீ ராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பெர்ஹாம்பூர் - செகந்திராபாத்
பெஜவாடா - மதுரை

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 23 — 1947 ஜனவரி 5 — வியய மார்கழி 21

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

கல்கி

மலர் 6 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 23

என்ன சேதி?

கதவு திறந்தது!

புது வருஷம் பிறந்ததும் பிறக்காததுமாகத் தமிழ்நாடு ஒரு பெருமைப் படத்தக்க காரியம் செய்திருக்கிறது. திருவாரூரில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி தம்முடைய கோவிலின் கதவுகளை அகலமாகத் திறந்து பல வருஷ காலமாகத் தம் கண்ணாலே கண்டிராத ஹரிஜன மக்களுக்குத் தரிசனம் அளித்திருக்கிறார்.


இடைக்கால சர்க்காரின் தொழில் மந்திரியும், தென்னாட்டிலுள்ள எல்லாக் கோவில்களையும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட்டே செல்லுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருப்பவருமான ஸ்ரீ ஜகஜீவன் ராமும் மற்றும் ஸ்தலப் பிரமுகர்கள் பலரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு அதைச் சிறப்பாக நடத்தி வைத்திருக்கிறார்கள்.

திருவருள் வேண்டும்

கொஞ்ச காலத்துக்கு முன்னாலே திருச்செந்தூர் முருகப் பெருமானுடைய கோவில் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பட்டது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இப்போது திருவாரூரிலுள்ள தியாகராஜ ஸ்வாமிகளின் சந்நிதி ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பட்டிருப்பதாக நற்செய்தி வந்திருக்கிறது. இன்னும் திருநெல்வேலியில் ஸ்ரீ நெல்லையப்பரின் ஆலயத்தையும் சென்னையில் ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமியின் கோவிலையும் திறந்து விடுவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. இங்ஙனம், தமிழ்நாட்டுத் திருக்கோவில்களின் கதவுகள் படார் படார் என்று திறக்கப்படும் சத்தம், வடக்கே வெகு தூரத்துக்கப்பாலுள்ள நம்முடைய சர்தார் வல்லபாய் படேலின் காதிலும் விழுந்திருக்கிறது. அவர் சமீபத்தில் குஜராத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், கடுமையான சநாதன தருமத்தை அனுஷ்டிக்கும் தென்னாட்டில் இம்மாதிரியாக ஒன்றன் பின்னொன்றாகப் பல ஆலயங்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவதைப் பார்த்து ஆச்சரியப் படுவதாகச் சொல்லி யிருக்கிறார். வல்லபாய் படேலை மாத்திரம் அல்ல, இன்னும் வடக்கே யுள்ள எல்லாத் தலைவர்களையும் — அகில இந்தியாவையுமே மூக்கின்மேல் விரலை வைக்கும்படியாகச் சென்னை மாகாணம் செய்வதற்கு இன்னும் ஒரு காரியம் பாக்கி யிருக்கிறது. அது திருப்பதி ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுடைய கோவிலையும் ஸ்ரீரங்கம் ரங்கநாத ஸ்வாமியின் கோவிலையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து தென்னாட்டிலே தீண்டாமை அரக்கனின் சரித்திரத்தை முடிக்க வேண்டும் என்பதே யாகும். இதற்கு அந்த வேங்கடேசப் பெருமானும் ரங்கநாத ஸ்வாமியும்தான் திருவருள் புரிய வேண்டும்!

ஏமாற்றம் மறைந்தது

இடைக்கால சர்க்கார் ஏற்பட்டு, அதில் பதவி வகிப்பவர்களுடைய பெயர்கள் எல்லாம் வெளி வந்தபோது, தேசமக்கள் அத்தனை பேருக்கும் உண்டான அளவு கடந்த சந்தோஷத்துக்கு மத்தியில் ஒரு பெரிய ஏமாற்றமும் உண்டாயிற்று. தேசத்தின் பொது ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபையின் சிம்மாசனத்தைப் பலமுறை அலங்கரித்த மௌலானா அபுல்கலாம்



சென்ற 23—12—46 அன்று மாலை சென்னையில் ஆரம்பமான அகில இந்திய சுதேசிப் பொருட்காட்சிச் சாலையை திரு வி. க. அவர்கள் திறந்து வைத்தார்கள். திரு. வி. க. அவர்கள் பொருட் காட்சிச் சாலையைச் சுற்றிப் பார்வையிட்டு வரும் போது அவர் பார்த்த காட்சிகளில் திருச்செங்கோட்டிலிருந்து வந்துள்ள கண்ணிழந்த தேசத் தொண்டர் ஒருவர் நூல் நூற்கும் காட்சியும் ஒன்று. கண்ணில்லாத போதிலும் அந்தத் தொண்டர் வேகமாகவும் சன்னமாகவும் நூற்பது ஆச்சரியமானது.

ஆஸாத் அவர்கள், இடைக்கால சர்க்காரில் உள்ள பதினன்கு ஸிம்மாசனங்களில் ஒன்றையும் அலங்கரிக்காததைக் கண்டு அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுவது இயற்கையே அல்லவா? அப்படி மௌலானா ஆஸாத் அவர்கள் நமக்கு ஏமாற்றம் விளைவித்த போதிலும் என்றாவது ஒரு நாள் அவர் இடைக்கால சர்க்காரில் நிச்சயமாகச் சேருவார் என்ற நம்பிக்கை மாத்திரம் இருந்து வந்தது. அந்த நம்பிக்கையும் இப்போது ஒரு வகையாகப் பூர்த்தியாகி யிருக்கிறது. ஜனாப் ஆஸப் அலி இந்தியாவின் ஸ்தானாதிபதியாக அமெரிக்காவுக்குச் செல்லுவதால் இடைக்கால சர்க்காரில் ஏற்படும் காலி ஸ்தானத்துக்கு மௌலானா ஆஸாத் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மௌலானா ஆஸாதின் நிதானமும், அரசியல் அறிவும், ராஜதந்திரத் திறமையும் எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். தற்போது தேசத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சிக்கலைத் தீர்ப்பதற்கும் இடைக்கால சர்க்கார் உற்சாகமாக வேலை செய்வதற்கும் மௌலானா ஆஸாதின் மதி நுட்பமும் நிதானமும் வெகுவாகப் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

கல்கத்தாவில் கொண்டாட்டம்

கல்கத்தாவிலிருந்துகூட நமக்கு நல்ல செய்தி வருகிறது! கல்கத்தா தமிழர்கள் ஸ்தாபித்து நடத்தி வரும் ஸ்ரீ தியாகராஜ சங்கீத சபையார் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் நூற்றாண்டு வைபவத்தை ஜனவரி மீ 12வயிலிருந்து 20உ வரையில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேற்படி வைபவத்தைக் காயன கந்தர்வ சங்கீத சம்ராட் பிரம்மஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள் தலைமை வகித்து நடத்திவைக்கப் போகிறார்கள் என்று அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இன்னும் பல சங்கீத வித்வான்கள் மேற்படி வைபவத்தில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிகிறது.

நிகழ்ச்சிச் சித்திரம்




இந்த வருஷம் முதல் இந்தியர்களுக்குப் புது வருஷப் பட்டங்கள் கிடையாது என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்ததும் ஹிந்து-முஸ்லிம் முதலாளிகள் ஒற்றுமையாகக் கண்ணீர் விட்டுக் கலங்குவதைக் கண்ட ...
என்ன, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையா?
புது வருஷப் பட்டங்கள் இரத்து
வட்டிக்குப் பணம் கொடுக்கிறவர்
இடைக்கால சர்க்கார் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவும் காங்கிரஸ் தலைவர் ஆசாரிய கிருபளானியும் சென்ற வாரம் நவகாளிக்குச் சென்று மகாத்மாஜியிடம் சில முக்கிய விஷயங்களைக் குறித்து ஆலோசனை கேட்டு வந்தார்கள்.
"தேசத்துக்கு ராஜாவாயிருந்தாலும் தாயாருக்கு மகன்தான்" என்ற பழமொழியை இது ஞாபகமூட்டுகிறது.
1946-ம் வருஷம் இருந்த இடத்தில்தான் 1947-ம் வருஷமும் தோன்றியிருக்கிறது என்பதைக் கண்டு சமாதான தேவதை ஆச்சரியமடைகிறாள்.
இரண்டாவது உலக யுத்தம் 1946-ம் வருஷத்திலேயே முடிந்து விட்டபோதிலும் இன்னும் யுத்த அபாயங்கள் மட்டும் நீங்கியபாடில்லை.
1947 JAN
என்ன, பழைய இடமே தானா?
சமாதான தேவதை
SHASTRY

ஞாபகம் வந்தது!

பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சென்ற புதன்கிழமையன்று அதிகாலையில் ம-ா-ா-ஸ்ரீ கனம் பொருந்திய இந்தியப் பொது ஜனம் அவர்கள் தூக்கத்திலிருந்து கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்ததும் அவருடைய திரு நயனங்களில் பளீரென்று சூரிய கிரணங்கள் பட்டன. "ஓகோ! பொழுது விடிந்து விட்டது போலிருக்கிறது!" என்று எண்ணிக்கொண்டு வெளியில் புறப்பட்டதும், தமக்கு எதிரே ஒரு புதிய மனிதர் வருவதைக் கண்டு திகைப்படைந்து நின்றார். "யாரோ? இவர் யாரோ? எந்த ஊரோ? எதற்கு வருகிறாரோ?" என்று யோசித்துக் கொண்டிருக்கையில், அந்த மனிதர், "நமஸ்காரம்! சௌக்கியந்தானே?" என்று கேட்டார். "ஏதோ இந்த மட்டும் சுமாராக சௌக்கியந்தான்! ஆனால் தாங்கள் யாரோ?" என்றார் ஸ்ரீமான் பொதுஜனம்.

"என்னைத் தெரியவில்லையா?" என்றார் வந்தவர்.

"பார்த்த ஞாபகமாயிருக்கிறது; ஆனால் ....." என்றார் பொதுஜனம்.

"என்னைப் பார்த்திருக்க முடியாது. நான் புது ஆசாமி!" என்று சொல்லிப் புது மனிதர் புன்னகை புரிந்தார்.

ஸ்ரீமான் பொதுஜனம் கொஞ்சம் நாணம் அடைந்து, "அப்படியா? தங்கள் நாமதேயம் என்னவோ?" என்றார்.

"என் பெயர் கொஞ்சம் நீளம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழு என்று சொல்வார்கள்!"

அப்போதுதான் ஸ்ரீமான் பொதுஜனத்துக்கு ஞாபகம் வந்தது — பழைய வருஷம் போய்ப் புது வருஷம் வந்து விட்டது என்று!

அடாடா! பழைய 1946-ம் வருஷத்துக்கு விடை கொடுத்துக் கூட அனுப்பவில்லையே? தாம் தூங்கிக் கொண்டிருக்கும் போதே அல்லவா ஆசாமி பிரயாணம் ஆகி விட்டார்? இது என்ன அநித்திய உலகம்? இது என்ன மாய வாழ்வு? இந்த உலகில் நேற்றைக்கு இருப்பாரை இன்றைக்கு இருப்பர் என்று எண்ண முடியவில்லையே?

இப்படி நினைத்தபோது ஸ்ரீமான் பொதுஜனத்தின் கண்களில் இரு கண்ணீர்த் துளிகள் துளித்தன.

"இது என்ன? உம்முடைய கண்களில் கண்ணீர் ஏன் வருகிறது? என்னைப் பார்த்ததில்......?" என்றார் புது மனிதர்.

"இல்லை, இல்லை; பழைய 1946-ம் வருஷத்தை நினைத்துக் கொண்டேன். கொஞ்சம் வருத்தமாயிருந்தது."

"அந்த முடுக்கில் நான் வந்த போது அவர் போனதைப் பார்த்தேன். பாவம்! அவரிடம் தங்களுக்கு ரொம்பப் பிரியம் போலிருக்கிறது. அவ்வளவு நல்ல மனிதராக்கும்!"

"நல்ல மனிதரோ, பொல்லாத மனிதரோ? முந்நூற்றறுபத்தைந்து நாள் நெருங்கிப் பழகி விட்டோமல்லவா? பிரிந்தவுடன் துயரமாயிருக்கிறது!"

"நல்லவரா, பொல்லாதவரா என்பதைப் பற்றிச் சந்தேகமாயிருக்கிறதா, என்ன? நிச்சயமாகச் சொல்ல முடியாதோ?" என்று கேட்டார் புது மனிதர்.

"அது எப்படிச் சொல்ல முடியும்? மனுஷர்கள் என்றால் நல்லதும் பொல்லாததும் கலந்துதான் இருக்கும். யாரா யிருந்தாலும் சரிதான். நல்லது பொல்லாததைப் பற்றி அபிப்பிராய பேதங்கூட இருக்கத்தான் இருக்கும். மகாத்மா காந்தியைப் பொல்லாதவர் என்று சொல்லுகிறவர்கள் கூட இல்லையா?" என்றார் பொதுஜனம்.

"அதற்கென்ன குறைச்சல்? கடவுளையே பொல்லாதவர் என்று சொல்கிறவர்கள் கூட இருக்கத்தான் செய்கிறார்கள். உம்முடைய அபிப்பிராயத்தில் 1946-ம் வருஷம் எப்படி? மொத்தத்தில் எப்படி என்றுதான்

கேட்கிறேன். சில்லறையில் கேட்க வில்லை!'' என்றார் புது மனிதர்.

இதைக் கேட்டதும் ம-ா-ா-ஸ்ரீ இந்தியப் பொதுஜனம் அவர்களுக்குச் சென்ற 1946-ம் வருஷத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள் எல்லாம் ஞாபகம் வந்தன. மேற்படி வருஷத்தில் தம்முடைய நிலைமை எப்படி இருந்தது என்பதையும் ஞாபகப் படுத்திக் கொண்டார்.

உணவுக்கும் துணிக்கும் இன்னும் மற்ற சாமான்களுக்கும் தாம் பட்ட பாடெல்லாம் அவருக்கு ஞாபகம் வந்தது. பதினாறு அவுன்ஸ் அரிசி எட்டு அவுன்ஸாகக் குறைந்தது நினைவுக்கு வந்தது. ஆடை வாங்குவதற்குப் பட்ட அவஸ்தை யெல்லாம் நினைவுக்கு வந்தது. ரயிலிலும் பஸ்ஸிலும் டிராமிலும் பட்ட நெருக்கடிக் கஷ்டமெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. கள்ள மார்க்கெட்டில் நடந்த கொள்ளைகளெல்லாம் நினைவுக்கு வந்தன. இதை யெல்லாம் நினைக்க நினைக்கக் கோபம் கோபமாய் வந்தது. ஆயினும் ஏதோ இந்த மட்டும் உயிரை வைத்துக்கொண்டு உடம்பை மூடிக்கொண்டு மானமாக வாழ்ந்து சென்ற வருஷத்தை ஒப்பேற்றினோமே என்பதை நினைந்து ஒருவாறு மனச் சாந்தி அடைந்தார்.

"இதெல்லாம் கிடக்கட்டும். உணவுக் கஷ்டம், உடைக் கஷ்டம், பிரயாணக் கஷ்டம், பணக் கஷ்டம்—இதை யெல்லாம் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். இன்றில்லாவிட்டால் நாளைக்குச் சரிப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அரசியல் நிலைமையின் விஷயம் என்ன? இந்தியாவின் சுதந்திர இலட்சியம் எந்த வரையில் நிறைவேறியிருக்கிறது? அன்னிய அதிகார வர்க்கத்தின் ஆட்சியிலிருந்து எந்த வரையில் மீட்சி கிடைத்திருக்கிறது? அன்னை பாரத தேவியின் விலங்குகள் எவ்வளவு வரையில் தகர்ந்து முறிந்திருக்கின்றன?'' என்று ஸ்ரீமான் பொது ஜனம் யோசனை செய்தார்.

அப்போது 1946-ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நடந்திருக்கும் முக்கியமான அரசியல் சம்பவங்கள் எல்லாம் அவருக்கு ஞாபகம் வந்தன.

* * *

இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்த்து வைத்து, இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதற்காகச் சென்ற வருஷத்தின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் மந்திரிகள் மூன்று பேர் இந்தியாவுக்கு வந்தார்கள். "ஆஹா! இது என்ன அற்புதம்? இந்த பிரிட்டிஷாரின் தாராள நோக்கந்தான் என்ன?'' என்று சிலர் அதிசயித்தார்கள். "பிரிட்டிஷாராவது? மனதார இந்தியாவுக்கு விடுதலை அளிப்பதாவது? ஒரு நாளும் இல்லை. இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்கும்!'' என்று சிலர் சந்தேகித்தார்கள். ஆயினும் பிரிட்டிஷ் மந்திரிகளின் நல்ல நோக்கத்தில் நம்பிக்கை வைத்தவர்களின் கட்சிதான் ஜயித்தது.

காங்கிரஸ் தலைவர்களுக்கும் முஸ்லிம் லீக் தலைவர்களுக்கும் சமரசம் ஏற்படாமற் போனபோது. அதைக் காரணமாக வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் மந்திரிகள் நடையைக் கட்டியிருக்கலாம். அப்படி அவர்கள் செய்யவில்லை. அவர்களே ஒரு மந்திரியஸ்தத் திட்டத்தைத் தீர்ப்பாக அளித்தார்கள்.

அந்தத் திட்டத்தில் ஒரே ஒரு அம்சத்தில் மட்டும் வியாக்கியான சுதந்திரத்தை வைத்துக்கொண்டு காங்கிரஸ் அதை முழுமையும் ஒப்புக் கொண்டது.

முதலில் திட்டத்தை ஒப்புக் கொண்ட முஸ்லிம் லீக், காங்கிரஸ் ஒப்புக்கொண்டதும் அதை நிராகரித்தது.

இதன் விளைவாக இடைக்கால தேசிய சர்க்காரைக் காங்கிரஸ் தலைவர்கள் தனிப் பொறுப்பில் அமைக்கும்படியாயிற்று.

பண்டித ஜவாஹர்லால்ஜி, சர்தார் வல்லபாய் பட்டேல், பாபு ராஜேந்திர பிரஸாத், ராஜாஜி ஆகியவர்களைக் கொண்ட தேசிய சர்க்கார் ஜாம் ஜாம் என்று நடப்பதைக் கண்ட ஜனாப் ஜின்னா தாம் செய்த தவறை உணர்ந்தார். வைஸ்ராய் வேவலின் காதைக் கடித்து, இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக்கினர் ஐந்து பேரை நுழைத்துவிட்டார். "காங்கிரஸ் முஸ்லிம் உள்ள தேசிய சர்க்காரில் லீக்கினர் சேர முடியாது!'' என்று வெகு காலமாகக் கூறிவந்த விம்பை ஜனாப் ஜின்னா கைவிட நேர்ந்தது.

இதற்கிடையில், அதாவது இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக்கினர் சேர்வதற்கு முன்னால், தனிப்பட்ட

காங்கிரஸ் சர்க்கார் நடப்பதை லீக் தலைவர்களால் பொறுக்கமுடியவில்லை. இது காரணமாக அவர்கள் 'நேரடி நடவடிக்கை'த் தீர்மானம் செய்தனர். அந்தத் தீர்மானத்தின் விளைவாகக் கல்கத்தாவிலும் நவக்காளியிலும் மிகப் பயங்கரமான ராட்சதச் செயல்கள் நடந்தன. அந்தச் செயல்களின் எதிரொலியைப் போல் பீஹாரிலும் மக்கள் பழிக்குப் பழி வாங்கத் தலைப்பட்டு மிகக் கொடுமையான காரியங்களைச் செய்தார்கள்.

பீஹாரில் மாகாண காங்கிரஸ் சர்க்கார் மிகவும் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டபடியால் ஒரே வாரத்தில் கொடுஞ் செயல்கள் நின்று குழப்பம் அடங்கியது. அவ்வளவு பெரிய விஸ்தாரமான குழப்பம் இவ்வளவு சொற்பமான காலத்தில் அடங்கியதாக இதுவரையில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்று உலகமே வியந்தது.

ஆனால் கீழ் வங்காளத்தில் அவ்வளவு விரைவாகக் கொடுமைச் செயல்கள் அடங்கவில்லை.

சேற்றிலே செந்தாமரை முளைத்தது போல் அந்தப் பயங்கரமான கொடுஞ் செயல்களிலிருந்து ஓர் அற்புதம் உண்டாயிற்று.

காந்தி மகாத்மா அந்தப் பயங்கரப் பிரதேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அசுரச் செயல்கள் நடந்த இடங்களில் அன்பையும் அஹிம்சையையும் உபதேசித்தார்.

அந்த ராட்சஸ பூமிக்குப் போக வேண்டாம் என்று பலர் மகாத்மாவைத் தடுத்தார்கள். அதையெல்லாம் காந்தி மகான் பொருட்படுத்தவில்லை. முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை.

முதலில் அவ்விடம் போனபோது மகாத்மா, ''என்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒளியையே காணவில்லை!'' என்றார்.

ஆனால் சில நாளைக்குப் பிறகு, அதாவது 1946-ம் வருஷக் கடைசியில், ''இருள் சிறிது விலகியிருக்கிறது. சில ஒளிக் கிரணங்களைக் காண்கிறேன்!'' என்று கூறினார்.

அதாவது, நவக்காளிக்கு அவர் போனபோது அங்கே குடிகொண்டிருந்த நிலைமையைப் பார்த்தபோது அன்பும் அஹிம்சையும் வெற்றி பெறுமா என்பது பற்றி மகாத்மாவுக்கே சந்தேகமாய்ப் போய் விட்டது.

ஆனால் சில நாள் அங்கே தங்கிய பிறகு, அந்த ராட்சதச் செயல்கள் நடந்த பிரதேசத்திலேகூட அன்பும் அஹிம்சையும் பலன் கொடுக்கும் என்ற நம்பிக்கை மகாத்மாவுக்கு ஓரளவு ஏற்பட்டிருக்கிறது.

கௌதம புத்தருக்கும் ஏசு கிறிஸ்துவுக்கும் பிறகு இந்தப் பூவுலகிலே அன்பு மதத்தையும் அஹிம்சா தர்மத்தையும் போதிக்க அவதரித்த பிரபு கீழ் வங்காளத்திலே தமது அற்புதமான அஹிம்சா சோதனையை ஆரம்பித்து நடத்தி வருகிறார்.

1946-ம் வருஷத்தில் உலகத்திலேயே மிக முக்கியமான சம்பவம் இது என்று சொல்ல வேண்டும்.

* * *

இந்தியாவின் அரசியல் வாழ்வில் மிக முக்கியமான சம்பவம் டிசம்பர் 9உ புது டில்லியில் நிகழ்ந்தது. இந்தியாவின் நிரந்தர சுதந்திர அரசியல் திட்டத்தை நிர்ணயிப்பதற்காக அன்றைய தினம் அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாயிற்று. சில பூர்வாங்கமான காரியங்களைச் செய்த பிறகு சபை ஜனவரி 20உக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

அரசியல் நிர்ணய சபையின் மேற்படி ஆரம்பக் கூட்டத்துக்கு முஸ்லிம் லீக்கினர் வந்திருக்கவில்லை. அதற்குக் காரணமாக அவர்கள் சொன்ன விஷயத்தைத் தீர்த்து வைப்பதற்கு பிரிட்டிஷ் மந்திரிகள் ஜனாப் ஜின்னாவையும் பண்டித ஜவஹர்லால் நேருவையும் லண்டனுக்கு அழைத்தார்கள். இந்தப் பிரயாணம் பயன் அளிக்கவில்லை; தகராறு தீரவில்லை.

தகராறுக்குக் காரணமாயிருந்த விஷயத்தில் பிரிட்டிஷ் மந்திரிகள் முஸ்லிம் லீக்குக்குச் சாதகமாக அறிக்கை விட்டார்கள்.

அதாவது பி, சி தொகுதிகளில் அஸ்ஸாம் மாகாணமும் எல்லைப்புற மாகாணமும் கட்டாயம் உட்கார்ந்தே தீர வேண்டும் என்றார்கள்.

இதன் பேரில் மேற்படி பிரச்னையை பெடரல் கோர்ட்டுக்குக் கொண்டு போகும் யோசனையைக் காங்கிரஸ் தலைவர்கள் கைவிட்டார்கள். மேலே என்ன செய்வதென்று தீர்மானிக்க

ஜனவரி மீ 5உ அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டத் தீர்மானித்தார்கள்.

* * *

மேற்படி சம்பவங்களை யெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்ட ஸ்ரீமான் பொதுஜனம், ''மொத்தத்தில் 1946-ம் வருஷம் நல்ல வருஷந்தான். அதாவது இந்தியா தேசத்துக்குச் சொல்கிறேன். புதிதாக வந்திருக்கும் உம்முடைய சமாசாரம் எப்படி யிருக்குமோ, தெரியவில்லை. நீர் என்ன செய்யப் போகிறீரோ, என்னவோ?'' என்றார்.

''என்னைப் பற்றி என்ன சந்தேகம்? நான் வருகிறபோதே நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேனே?'' என்றார் புது மனிதர்.

''அப்படியா? அது என்ன நல்ல செய்தி?'' என்று ஆவலுடன் கேட்டார் ஸ்ரீ பொதுஜனம்.

புதிய மனிதர் தம் கையிலிருந்த அன்று காலைப் பத்திரிகையை நீட்டினார். அதில், ''பிரிட்டிஷ் சர்க்கார் இனிமேல் இந்தியர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் கொடுக்கப் போவதில்லை'' என்ற செய்தி கொட்டை எழுத்துத் தலைப்புடன் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

''சபாஷ், ஐயா! சபாஷ்! இந்த வருஷம் இந்தியாவுக்கு மிகவும் நல்ல வருஷமாகத்தான் இருக்க வேண்டும். பூரண சுதந்திரமே இந்தியா அடைந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்போது பிரிட்டிஷார் இந்திய அதிகாரவர்க்க தாஸர்களுக்குப் பட்டங்கள் கொடுப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்களோ, அப்போது இந்தியாவைக் 'குவிட்' பண்ணவும் அவர்கள் முடிவு செய்திருக்க வேண்டும்!'' என்று ஸ்ரீ பொதுஜனம் உற்சாகத்துடன் கூறினார்.

''இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவை விட்டுப் போனாலும் இங்கிலீஷை நீர் விடமாட்டீர் போலிருக்கிறதே!'' என்றார் வந்த மனிதர்.

''வெகு நாள் பழக்கமல்லவா? அதையும் இந்த வருஷத்தில் தொலைத்து விட்டால் போகிறது. தமிழுக்குக் கூட அல்லவா இப்போது யோகம் பிறந்திருக்கிறது?'' என்றார் பொதுஜனம்.

இந்தச் சமயத்தில் ம-ள-ள-ஸ்ரீ பொதுஜனம் அவர்களுக்கு ஒரு முக்கியமான விஷயம் நினைவுக்கு வந்தது.

அது மிக மிக முக்கியமான விஷயந்தான். அதாவது தமது திரு வயிற்றைப் பசி கிள்ளுகிறது என்பதுதான்.

உடனே ஸ்ரீ பொதுஜனம் தமது வயிற்றைப் பார்த்து, ''அப்பா! யார் வந்தாலும் யார் போனாலும் நீ மட்டும் சும்மா யிருக்க மாட்டாய் போலிருக்கிறது. ஆனால், இந்தியா இன்னும் பூரண சுதந்திரம் அடைந்து விடவில்லை. உணவுப் பஞ்சமும் இன்னும் தீர்ந்து விடவில்லை. ஆகையால் இரண்டு இட்லி, ஒரு தம்ளர் காப்பி — இதற்குமேல் கேட்காதே! தெரியுமா? ஞாபகம் இருக்கட்டும்!'' என்று எச்சரிக்கை செய்தார்.

பின்னர் பொதுஜனமும் புதுவருஷமுமாகச் சேர்ந்து, ''ஜயமுண்டு பயமில்லை மனமே!'' என்று கோஷ்டிகானம் செய்துகொண்டு போனார்கள்.

அடுத்த இதழில்

சோலைமலை இளவரசி

''கல்கி''

ஸ்ரீ தியாகராஜ வைபவம்

அநித்தியமான இந்தப் பூவுலகத்தில் பிறக்கும்போதே என்றும் சிரஞ்சீவியாக வாழும் பாக்கியம் பெற்றுச் சிலர் அவதரிக்கிறார்கள். அத்தகைய மகான்களில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஒருவர். ஆந்திர பாஷைக் குரியவராயினும் சோழவள நாட்டில் பிறந்து வளர்ந்து திருவையாற்றில் சமாதி யடையும் பேறு பெற்றவர்.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" இயற்றப்பட்ட காலத்துக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலேயே செந்தமிழ் நாடு ஆடல் பாடல் கலைகளில் சிறந்து விளங்கியது. ஆயிரத்துமுந்நூறு வருஷங்களுக்கு முன்னால் அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் தமிழோடு இசை பாடிச் சைவத்தையும் சங்கீதத்தையும் சேர்த்து வளர்த்தார்கள். அதே காலத்தில் காஞ்சி சாம்ராஜ்யத்தை ஆண்ட மகேந்திர பல்லவன் சங்கீதக் கலையில் மேதையாய் விளங்கினான். மேளகர்த்தா ராகங்களையும் தாள வகைகளையும் பாகு படுத்தினான்.

அத்தகைய தமிழ்நாட்டுப் பழம் பெரும் கலை இன்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன்பு திடீரென்று பிரமாதமான செழிப்பை அடைந்தது. சில மரங்கள் திடீரென்று ஒரு வருஷத்தில் இலை என்பதே இல்லாமல் பூ மயமாய்க் குலுங்குவதைக் காண்கிறோம். அது போலவே கர்நாடக சங்கீதமாகிய விருட்சமும் புஷ்பித்துக் குலுங்கிற்று. கணக்கில்லாத கனிகளையும் அளித்தது.

கர்நாடக சங்கீதக் கலையின் சிகரம் என்று சொல்லக் கூடிய அம்சம் பல்லவி, அனுபல்லவி, சரணம்—இவற்றோடு கூடிய கீர்த்தனம் அல்லது கிருதி என்பதாகும். தியாகராஜர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகள் ஆகிய சங்கீத மும்மூர்த்திகள் தோன்றி கீர்த்தனப் பாணியில் சிறந்த சாஹித்யங்களை இயற்றினார்கள். அவர்களிலும் ஸ்ரீ தியாகராஜர் படிப்படியான சங்கதிகள் போட்டு விந்யாசமாகத் தாளக் கட்டுடன் பாடக் கூடிய ஆயிரக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றினார். அவருடைய கீர்த்தனங்கள் சிறந்த ராக பாவத்துடனே தெய்விகமான பக்தி பாவமும் ததும்பப் பெற்றுச் செவிக்கு அமுதமாயும் பாஷை அறிந்தவர்களின், இருதயத்தைப் பரவசப் படுத்தக் கூடியனவாயும் விளங்குகின்றன.

கர்நாடக சங்கீதத்துக்குரிய எத்தனையோ ராகங்களின் வடிவத்தை இன்று தியாகராஜரின் கீர்த்தனங்களைக் கொண்டு வருத்து அறிய வேண்டியதா யிருக்கிறது. அவருடைய கனராக கீர்த்தனங்களில் கையாண்டிருக்கும் பிரயோகங்களைக் கொண்டு ராகங்களை எவ்வளவோ விஸ்தாரப்படுத்திப் பாட முடிகிறது.

ஸ்ரீ தியாகராஜர் வெறும் சங்கீத வித்வானும் சாஹித்ய கர்த்தாவும் மட்டு மல்ல; பகவானுக்கே தம்மை அர்ப்பணம் செய்த பரம பாகவத சிரோமணி. ஸ்ரீ ராமபிரானைப் பிரத்யட்ச தரிசனம் செய்தவர்; அதாவது தம் வாணாளிலேயே ஆத்மாநுபூதி அடைந்தவர். தஞ்சாவூர் மன்னன் அவரைத் தமது சபைக்கு அழைத்தபோது, அந்த அழைப்பை மறுதளித்து, "பணத்திலும் பதவியிலும் என்ன சுகம் இருக்கிறது? பகவானுடைய சந்நிதியில் செய்யும் சேவையில் அல்லவா உண்மையான சுகம் உண்டு?" என்று பாடிய தியாக புருஷர். அது மட்டு மல்ல; "பக்தி இல்லாத வெறும் சங்கீதத்தினால் என்ன பிரயோஜனம்?" என்றும் பாடியிருக்கிறார்.

அத்தகைய மகா புருஷர் மகா சமாதி அடைந்து இன்றோடு நூறு வருஷம் ஆகிறது. இந்த வைபவத்தை நாளது ஜனவரி 5உ யன்று அவர் சமாதி அடைந்திருக்கும் திருவையாற்றில் விசேஷமாகக் கொண்டாட வேண்டுமென்று மூன்று வருஷமாகப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் நாட்டைப் பிடித்திருக்கும் தானியப் பஞ்சம் முதலிய காரணங்களினால் அந்த நோக்கம் நிறைவேறவில்லை.

அதற்குப் பதிலாக, தேச மெங்கும், சங்கீத அபிமானம் உள்ள தமிழர்கள் வசிக்கும் இடங்களி லெல்லாம், ஸ்ரீ தியாகராஜரின் நூற்றாண்டு சமாதி தினத்தைக் கொண்டாடினார்கள்.

மியூஸிக் அகாடமி என்னும் சங்கீத வித்வத் சபையில் கச்சேரி செய்த வித்வான்கள் முழுமையும் தியாகராஜ கீர்த்தனங்களாகவே பாடிக் கொண்டாடினார்கள்.

பம்பாய், டில்லி, கல்கத்தா முதலிய நகரங்களிலும் கொண்டாடப் போகிறார்கள்.

நாமும் நமது இதழ் அட்டையில் அந்தப் பக்த சிரோமணியின் திரு வுருவத்தை வெளியிட்டுக் கொண்டாடுகிறோம்.

பழியா பாவமா?

ஆராவமுதன்

பூங்கொடி, வயலும் வாய்க்காலுமாய் விளங்கும் அழகானதோர் கிராமம். என்னுடைய தமக்கை அங்குதான் இருந்தாள். ஒவ்வொரு வருஷமும் கோடை விடுமுறைக்கு நான் அங்கு செல்வது வழக்கம். அதேபோல் அந்த வருஷமும் காலேஜ் மூடியவுடன் பூங்குடிக்குப் போயிருந்தேன். அப்பொழுது நடந்த சம்பவம் இது.

ஒரு நாள் ஏனோ மனம் ஒரு நிலையில் இல்லாமல் விவரிக்க முடியாத சஞ்சலம் அடைந்திருந்தேன். சரி, கிராமத்தின் எல்லையில் இருக்கும் தோட்டத்திலாவது உலாவி வரலாம் என்று புறப்பட்டேன்.

கால் போன போக்கில் அலைந்து திரிந்து தோட்டத்தின் நடுவே அமைந்த குளத்தருகில் வந்தேன்.

"கொஞ்சம் தயவு செய்து இங்கே வாருங்கள்!" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன்.

குளக்கரையில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். வயது சுமார் இருபது இருக்கும். நல்ல அழகி; சிவப்பு நிறம்; துருதுருவென்ற விழிகள். பார்த்தவுடனேயே அவள் உருவம் என் மனதைக் கொள்ளை கொண்டு விட்டது.

அவள் என்னை அழைத்ததின் நோக்கத்தை நான் ஒரு நொடியில் அறிந்து கொண்டேன். அந்தப் பெண் குளத்தில் ஜலமெடுக்க வந்திருக்கிறாள்; குடம் நழுவி விட்டது. அதை எடுத்துக் கொடுக்கவே என்னைக் கூப்பிட்டிருக்கிறாள்.

மௌனமாகச் சற்று தூரத்தில் மிதந்து கொண்டிருந்த குடத்தை எடுத்துக் கொடுத்தேன்.

தன் நன்றியைத் தெரிவிக்கும் ஒரு பார்வை என்னைப் பார்த்து விட்டு, ஜலமெடுப்பதில் முனைந்தாள்.

ஏதோ உணர்ச்சியுடன் சரேலென்று அவள் கழுத்தை உற்று நோக்கினேன். இன்னும் கலியாணமாகவில்லை என்று புரிந்தது.

நான் கழுத்தைக் கவனித்துப் பார்த்தது அவளுக்குத் தெரிந்து விட்டது. அவ்வளவுதான்; அவளுடைய கண்கள் கலங்கி விட்டன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"நான் போய் வருகிறேன்!" என்று புன்சிரிப்புடன் கூறி அவள் நகர்ந்தாள். அந்தச் சிரிப்பு இயற்கையானதல்ல என்று எனக்கும் புரிந்து விட்டது. அவளுக்கு வருத்தம் ஏற்படும்படி நான் என்ன செய்து விட்டேன்? ஆழ்ந்த யோசனையுடன் வீடு திரும்பினேன்.

★

அவள் உருவம் என் மனக் கண்ணை விட்டு அகலவே யில்லை. அவள் யார் என்று தெரிந்து கொள்ள என் மனம் துடித்தது. அக்காளைக் கேட்கலாம் என்று தோன்றியது. ஆனால், என்ன அடையாளங்களைக் கூறி அவளை அக்கா புரிந்துகொள்ளும்படி செய்வது? அவள் பெயர்கூடத் தெரியாதே!—சரி, மறுநாள் அவளையே கேட்டுவிடலாம் என்று நிச்சயித்துக் கொண்டு படுக்கச் சென்றேன்.

அடுத்த நாள் அந்தப் பாழாய்ப்போன ஆறு மணி எப்போது வரும் என்று துடித்துக் கொண்டிருந்தேன். அவளைச் சந்திப்பதற்கு வழி ஒன்றுதானே? ஜலமெடுக்க வரும் போது சந்தித்தால்தான் உண்டு. தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டேன்.

அப்பொழுதுதான் அவள் வந்து கொண்டிருந்தாள். நான் அவளைப் பார்க்காதது போல் அவள் ஜலமெடுக்கும் இடத்தில் கால்களை ஜலத்தில் அமிழ்த்திக் கொண்டு கரையில் உட்கார்ந்தேன். "கொஞ்சம் நகருங்கள்!" என்று சொல்லுவாள், பிறகு அந்தச் சாக்கில் பேச ஆரம்பிக்கலாம் என்பது என்னுடைய எண்ணம்.

அது பலிக்கவில்லை; மடமட வென்று எதிர்க் கரைக்குச் சென்று அவள் ஜலமெடுக்க ஆரம்பித்தாள். "என்னை அசடாக்கி விட்டாளே!" என்று பல்லைக் கடித்துக் கொண்டேன். "குடம் இன்றைக்கும் நழுவாதா?" என்று ஆவலுடன் நோக்கினேன். அந்தப் பொல்லாத குடமும் எனக்கு எதிராகச் சதி செய்தது.

தண்ணீர் எடுத்துக் கொண்டு அவள் புறப்பட்டாள். அவளுடன் பேச வேண்டுமென்று துடித்தேன். ஆனால் தைரியம் வரவில்லை.

இப்படிப் பல நாட்கள் கழிந்தன. ஆனால் அவளிடம் பேச எனக்குத் துணிவே ஏற்படவில்லை; அவளும் என்னிடம் பேசவில்லை.

★

அவ்வளவு தைரியம் அன்று எப்படி வந்தது என்று எனக்கே புரியவில்லை. "நான் என்ன, சிங்கமா, புலியா? என்னிடம் பேசினால் என்ன?" என்று கேட்டே விட்டேன்.

அவள் பதிலுக்கு ஒரு முறை என் முகத்தைப் பார்த்து விட்டுப் போய் விட்டாள்.

மறு நாள சாயங்காலமும் தோட்டத்துக்குச் சென்றேன்.

"நேற்றைய தினம் நான் அப்படி உங்களிடம் பேசியிருக்கக் கூடாது. அதில் உங்களுக்கு மன வருத்தமென்று முகத்திலிருந்தே தெரிந்தது. மன்னிப்புக் கேட்பதற்காகவே இன்று நான் இங்கு வந்தேன்!" என்று நாசூக்காக ஆரம்பித்தேன்.

"இன்று மன்னிப்புக் கேட்பதற்கு; நாளைக்கு, மன்னிப்புக் கிடைத்து விட்டதா என்று தெரிந்து கொள்ளுவதற்கு; இந்த மாதிரி தினம் ஏதாவது ஒரு காரணம் வைத்துக் கொண்டு நீங்கள் இங்கே வருவீர்கள் போலிருக்கிறது!" என்று அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"நான் இங்கு வருவது பிடிக்கவில்லை என்றால்......"


"நீங்கள் வரவேண்டாமென்று நான் சொல்லவில்லையே! தாராளமாய் வந்து விட்டுப் போங்கள்!" என்று கூறிக் கொண்டே என் கையில் ஒரு காகிதச் சுருளைத் திணித்து விட்டு அவள் வேகமாய்ப் போய்விட்டாள்.

அவளுடைய துணிச்சலையும், கனிசென்ற குரலையும் மாறி மாறி அனுபவித்துக் கொண்டே காகிதத்தைப் பிரித்தேன்.

அன்பார்ந்த ஐயா,

முன்பின் தெரியாத இந்த ஊரில் வசித்தாலாவது மன நிம்மதி ஏற்படும் என்று நினைத்து வந்தாள். கடவுள் இங்கும் என்னை அமைதியாக இருக்க விடவில்லை.

நான் ஒரு பால்ய விதவை. உலக இன்பத்துக்கும் எனக்கும் வெகு தூரம். துக்கத்தில் ஆழ்ந்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது என் தலையில் எழுதிய எழுத்து.



சயன்ஸ் உபாத்தியாயர் (பையனைப் பார்த்து):—சூரிய வெளிச்சத்தில் பார்க்க முடியாத பொருள்களே கிடையாது. ஏதாவது உண்டா?

பையன்:—உண்டு, ஸார்!

உபாத்தியாயர்:—என்ன அது? பார்க்க முடியாத பொருள் ஒன்று சொல்லு, பார்க்கலாம்!

பையன்:—இருட்டு, ஸார்!

நான் உங்களிடம் என் மனதைப் பறிகொடுத்து விட்டேன். நீங்களும் என்னைக் காதலிக்கின்றீர்கள் என்று எனக்குத் தெரியும்.

ஆனால், இந்த அபாக்கியவதியை மறந்து விடுவது நலம். நம்முடைய காதல் வளர்ந்தால் உங்களுக்குத் துக்கமேயன்றி, சுகமில்லை. சாஸ்திரமும், சமூகமும் அதை எதிர்க்கும்.

உலகத்தைப் பொருட்படுத்தாமல் இருக்க உங்களுக்குத் தைரியம் உண்டானால், பட்டுப் போன என் வாழ்க்கை மரத்தில் துளிர்கள் காணும், இல்லாவிட்டால் என் விதிப்படி தேய்ந்து அழிகிறேன்.

நிர ஆலோசித்து முடிவுக்கு வாருங்கள்.

நாளைச் சாயந்திரம் தோட்டத்துக்கு வந்தால் உங்களுக்குச் சம்மதம் என்று தெரிந்து கொள்ளுவேன். இல்லையானால்......

இப்படிக்கு,

பார்வதி.

இதைப் படித்தவுடன் மண்டையில் சம்மட்டியால் தாக்கி அடித்தாற்போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

அன்று அவள் கழுத்தை நான் பார்த்த போது அவள் கண்களில் நீர் கலங்கியதின் மர்மம் விளங்கியது.

மனதில் ஒரு பெரிய போராட்டம். பார்வதி ஒரு விதவை. அவளை மணந்தால்......? அதனால் ஏற்படும் கஷ்டங்கள் என் மனக் கண்முன் தோன்றின.

என் தகப்பனாரையும், தாயாரையும் எப்படிச் சமாதானம் செய்வது? சமூகத்தின் எதிர்ப்பை எவ்வாறு சமாளிப்பது? அவளை மணந்து கொண்டால் என் மனக்கோட்டைகளெல்லாம் தகர்ந்து, வாழ்க்கை ரஸ

மறந்தாகிவிடுமே! கலியாணமாக வேண்டிய தங்கைகள் மூன்று பேர் எனக்கு. பார்வதியை நான் மணந்து கொண்டால் அவர்கள் கதி என்ன ஆவது? நிர்க்கதிதான். என்னுடைய காதல் வெற்றிக்காகக் குடும்ப சந்தோஷத்தையே பலி கொடுப்பதா?

இம்மாதிரி பல எண்ணங்கள் தோன்றித் தோன்றி என் மனதை யறுத்தன.

கடைசியில், ஒரே ஒரு மார்க்கம்தான் எனக்குத் தோன்றியது. அது மறுபடியும் பார்வதியின் முகத்திலேயே விழிக்காமல் ஊரை விட்டே போய் விடுவது என்பது தான்! நேர் வழியில் சரளமாகச் சென்று கொண்டிருந்த என் வாழ்க்கையைக் காடு முரடாக்காமல் இருக்க அந்த முடிவுக்கே நான் வந்தேன்.

என் தமக்கை எவ்வளவோ தடுத்தும் மறுநாள் ஊருக்குப் புறப்பட்டு விட்டேன்.

★

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. என்னுடைய தங்கைகள் நல்ல இடங்களில் கலியாணமாகி, சுகமாய் வாழ்கிறார்கள். எனக்கும் கலியாணமாகிவிட்டது.

இப்பொழுது பெரிய டாக்டர் நான், ஜெனரல் ஆஸ்பத்திரியில். சத்ர சிகிச்சையில் என்னை மிஞ்சுபவர்கள் யாருமில்லை என்று பெயர் வாங்கி விட்டேன்.

பணத்துக்கும் குறைவில்லை; ஆகவே, என்னுடைய வாழ்க்கை வேண்டிய வசதிகளுடன்தான் இருந்தது. ஆனாலும் மனதில் அமைதி கிடையாது. பார்வதிக்கு நான் பெரிய அநீதி செய்து விட்டேன் என்று என் மனச் சாட்சி உறுத்திக் கொண்டேயிருந்தது. வடு ஆழ்ந்து படிந்து விட்டது; அதனால் மனதில் ஆறாத புண் ஏற்பட்டு விட்டது. நானும் என் குடும்பமும் வாழும் இன்ப வாழ்வு, அவள் வாழ்க்கைச் சமாதியின் மேல் எழுப்பிய கட்டிடமே அல்லவா?

அன்று படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே மனது ஒரு நிலையில் இல்லை. விவரிக்க முடியாத அமைதியின்மையும், சஞ்சலமும் என்னை வாட்டின.

இதற்குமுன் இந்தமாதிரி உணர்ச்சி ஒரே தடவைதான் என் வாழ்க்கையில் ஏற்பட்டது. முதன் முதலில் பார்வதியைத் தோட்டத்தில் சந்தித்த தினத்தன்று இருந்த நிலையில் இருந்தது என் மனம். என்ன விபரீதம் ஏற்படப் போகின்றதோ என்று எண்ணிக் கொண்டே ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டேன்.

அலுப்புடன், "எல்லாக் 'கேஸ்'ம் முடிந்து விட்டதல்லவா?" என்று என் உதவி டாக்டரைக் கேட்டேன்.

"இன்னும் ஒரே ஒரு கேஸ். அதையும் முடித்து விடுங்கள்!" என்றார் அவர்.

"எனக்கு உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறது. நீங்களே கவனியுங்கள், அதை!" என்று கூறிப் புறப்பட ஆயத்தமானேன்.

"இல்லை, இல்லை. பெரிய ஆபரேஷன் அது. 'அபெண்டிஸிடிஸ்' ஒரு ஸ்திரீக்கு. நீங்களே கவனித்தால்தான் நல்லது."

"சரி, சரி, சீக்கிரம் 'க்ளோரோபாரம்' கொடுங்கள்" என்று கூறிவிட்டு, 'கேஸ் ஷீட்'டைப் பார்த்தேன்.

பார்வதி! — அதுதான் அந்த நோயாளியின் பெயர்!

நோயாளியின் முகத்தைப் பார்த்ததுடன் அப்படியே ஸ்தம்பித்து விட்டேன். அந்தச் சம்பவம் நடந்து சுமார் இருபது வருஷங்கள் ஆகியிருந்தாலும் பார்வதியை அடையாளம் புரிந்து கொள்ளக் கஷ்டமாயில்லை எனக்கு. அவள் உருவம்தான் பார்த்த வினாடியிலிருந்து என் மனதில் பதிந்து விட்டதே!

உடம்பெல்லாம் வியர்த்தது எனக்கு. கை கால்கள் நடுங்கின. என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

"சீக்கிரம் டாக்டர், 'க்ளோரோபாரம்' கொடுத்து ரொம்ப நேரமாகிவிட்டது!" என்று 'நர்ஸ்' கூறியவுடன்தான் சுயநினைவு வந்தது.

மனதைத் திடப்படுத்திக் கொண்டு வேலையை ஆரம்பித்தேன். எவ்வளவு முயன்றும் கை நடுக்கத்தை மட்டும் நிறுத்த முடியவில்லை.

"ஐயோ, டாக்டர்!" என்று நர்ஸும், உதவி டாக்டரும் திடீரென்று கத்தி விட்டார்கள்!

காரணம், கை நடுக்கத்தினால் முக்கியமான ரத்தக் குழாய்களை நான் அறுத்து விட்டதுதான். என்னுடைய தவறு தெரிந்தும் நான் மருள மருள விழித்தேன்.

"ஆபரேஷன் வெற்றிகரம்; ஆனால் நோயாளி அதிர்ச்சியினால் இறந்து விட்டாள்!" என்று 'கேஸ் ஷீட்'டில் வழக்கம்போல் குறிப்பு எழுதப்பட்டது!

கருவேப்பிலைக்காரி

விந்தன்

வழக்கம்போல் இன்றும் விடியற்காலை ஐந்து மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்தேன். மணி பத்தாகும் வரை அவருக்கு வேலை செய்வதற்கே பொழுது சரியாயிருந்தது.

மாதம் பிறந்தால் அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்காரன் அவருக்குத் தொண்ணூற்றைந்து ரூபாய் 'பிச்சைக் காசு' கொடுத்தாலும் கொடுத்து விடுகிறான், அவர் மட்டுமா அவனுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது? நானும்தான் அவர் மூலம் அவனுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது!

மணி பத்துக்குமேல் ஒரு நிமிஷம் ஆகிவிட்டால் போதும், அவர் தவியாய்த் தவித்துக் குதியாய்க் குதிப்பார்! — அவர் குதிப்பதைப் பார்த்துக் கொண்டு நான் மட்டும் சும்மாயிருக்க முடிகிறதா? — கை பிடித்த தோஷம், நானும் அவருடன் சேர்ந்து குதித்துத்தான் ஆக வேண்டும்!

இதனால் அவருக்கு ஒன்றும் கஷ்டமில்லை — நேரம் கழித்துச் சென்றால் மானேஜர் கோபித்துக் கொள்வாரே என்பதைத் தவிர! எனக்குத்தான் கஷ்டமெல்லாம்.

நான்தான் அவருக்குப் பயந்து தொலைகிறேன்; அந்தப் பாழாய்ப் போன அடுப்பு அவருக்குப் பயந்து தொலைகிறதா, என்ன? அது தன் பாட்டுக்கு நிர்விசாரமாக எரிந்து தொலைகிறது!

அவசரத்தில் நான் அதைத் தூண்டி விடும்போது, அது சில சமயம் என் கை விரல்களைத் தீண்டி விடும்; 'அப்பப்பா!' என்று துடித்துப் போவேன். அதுதான் சமயமென்று கஞ்சித் தண்ணீர் வேறு என் கையில் கொட்டிக் கொண்டு விடும்; பச்சைத் தண்ணீரில் கையைத் தோய்த்துத் தோய்த்து எடுத்த வண்ணம் பதைபதைத்துப் போவேன்!

இந்தச் சமயத்தில், "என்ன, வள்ளி! ஏதாவது கொண்டு வருகிறாயா? இல்லை, நான் போகட்டுமா?" என்று அவர் வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகக் கேட்பார்!

அவர் அவ்வாறு கேட்கப் பிறந்தவர்; கேட்கலாம். "இப்பொழுது ஒன்றும் கொண்டு வருவதற்கில்லை; நீங்கள் போகலாம்!" என்று நான் பதிலுக்குச் சொல்ல முடியுமா? — அவ்வாறு சொல்ல நான் பிறந்தவளல்லவே? — நான் மட்டும் என்ன, எங்கள் வர்க்கமே அவ்வாறு சொல்வதற்குப் பிறந்ததல்லவே!

ஆகவே, "இதோ வந்து விட்டேன்!" என்று எல்லாவற்றையும் ஆவி பறக்கப் பறக்க எடுத்துக் கொண்டு கூடத்தை நோக்கி ஓட்டமாய் ஓடுவேன்.

இலையைப் போட்டு எல்லாவற்றையும் பரிமாறிய பிறகு, வியர்த்து நின்று எரியும் கையை வாயால் ஊதி ஊதித் தணிக்கப் பார்ப்பேன். அதை அவர் பார்த்து விடுவார்! — ஆனால், "ஐயோ, பாவம்!" என்று பச்சாத்தாபப் படுவார் என்கிறீர்களோ, அதுதான் கிடையாது. "அவ்வளவு அஜாக்கிரதை!" என்று கடிந்து கொள்வார்!

இன்று நான் விழித்த வேளை நல்ல வேளை போலிருக்கிறது. மேற்கூறிய விபத்து எதுவும் இன்று எனக்கு நேரவில்லை; குழந்தை ராதையும் மணி பத்துக்கு மேலாகியும் தொட்டிலை விட்டுக் கீழே இறங்கவில்லை. அவள் தன் பாட்



ஒக்குத் தொட்டிலுக்கு மேலே கட்டித் தொங்கும் பறக்கும் கிளிப் பாவையுடன் ஏதோ 'ங்கா' பாஷையில் பேசிக்கொண்டிருக்கிறான்!

அப்பப்பா! சிலசமயம் அவன் தன் 'ங்கா' பாஷையைக் கைவிட்டு விட்டு, 'குவா குவா' என்று பாஷையில் கத்த ஆரம்பித்து விட்டால் 'போதும் போதும்' என்று ஆகி விடும். இம்மாதிரி சமயங்களில் அடுப்புக் காரியமும் ஆகவேண்டி யிருந்தால் கேட்கவே வேண்டாம். 'குழந்தை வேண்டாம்!' என்று தீர்த்த யாத்திரை போவதற்கு ஏதாவது கோயிலோ, குளமோ இருக்காதா என்று தோன்றி விடும்!

நானும் குழந்தை பிறந்ததிலிருந்துதான் அவரிடம் சொல்லிக்கொண்டு வருகிறேன், "வீட்டில் இருப்பது நான் ஒருத்தி; அழுகிற குழந்தையை வைத்துக்கொண்டு என்னால் உங்கள் அவசரத்துக்குச் சமைத்துப் போட முடியாது. அதைத் தூக்கி



வைத்துக் கொண்டிருக்க யாராவது ஓர் ஆளைப் பாருங்கோ!" என்று. அவர் கேட்டால்தானே?

"எனக்குக் கிடைப்பதோ மாதம் தொண்ணூற்றைந்து ரூபாய். அதில் ஐந்தே ஐந்து ரூபாயை என் செலவுக்கு எடுத்துக்கொண்டு மீதி தொண்ணூறு ரூபாயை உன்னிடமே கொடுத்து விடுகிறேன். நீயோ அதுவே செலவுக்குப் போதவில்லை யென்று எப்பொழுது பார்த்தாலும் அழுது வடிகிறாய்!—முடியுமானால், நீ அதற்குள்ளேயே குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதற்காக ஒரு வேலைக்காரியைப் பார்த்து வைத்துக் கொள்வதை நானா வேண்டாம் என்கிறேன்!" என்று தட்டிக் கழித்து விடுகிறார் அவர்.

அவர் சொல்வதிலும் நியாயம் இல்லாமற் போகவில்லை. அப்படியானால் நான் சொல்வதில்தான் நியாயம் இல்லையோ!

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் அம்புஜம் வந்தாள். அவள் என் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரி. அவளுடைய கணவரும் என்னுடைய கணவருடன்தான் வேலை பார்க்கிறார். இருவருக்கும் ஒரே சம்பளந்தான் என்று கேள்வி.

அப்போதுதான் நான் அலமாரியைத் திறந்து ஒரு கதைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தேன். அம்புஜம் வருவதற்கும், குழந்தை ராஜா தன் 'ங்கா' பாஷையைக் கைவிட்டு விட்டு 'குவா' பாஷையில் கத்த ஆரம்பிப்பதற்கும் சரியா யிருந்தது.

"உன்னை வைத்துக் கொண்டுகூட யாராவது ஏதாவது படிக்க முடியுமோ!" என்று அலுத்துக்கொண்டே நான் புத்தகத்தை மூடி வைத்துவிட்டுக் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொள்வதற்காக எழுந்தேன்.

"இருப்பது நீங்கள் இரண்டே பேர்—அந்தக் குழந்தையைத் தவிர! பகவான் கிருபையில் அவருக்கு மாதம் நூறு ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. மாதம் ஐந்து ரூபாய் கொடுத்தால் யாராவது ஒருத்தி வேலைக்கு வந்து அந்தக் குழந்தையை அழ விடாமல் பார்த்துக்கொள்ள மாட்டாளோ? அப்படிச் செய்வதை விட்டுவிட்டு இப்படி அலுத்துக் கொள்வானேன்?" என்றாள் அம்புஜம்.

"அவருக்குச் சம்பளம் நூறு ரூபாயா?—இல்லையே!—தொண்ணூற்றைந்து ரூபாய்.

அதிலும் ஐந்து ரூபாய் அவருடைய செல வுக்கு எடுத்துக் கொண்டு என்னிடம் தொண்ணூறு ரூபாய்தானே கொடுக் கிறார்?” என்றேன் நான், குழந்தையை எடுத்துக்கொண்டே.

“என், பாக்கி ஐந்து ரூபாய் எங்கே போகிறதாம்? நேற்றுக்கூட ஏதோ பேச்சு வாக்கில் அவர் என்னிடம் சொன்னாரே, எனக்கும் நூறு ரூபாய்தான் சம்பளம், அடுத்த வீட்டுக்காரனுக்கும் நூறு ரூபாய் தான் சம்பளம் என்று!”

“பார்த்தாயா, அம்புஜம்! இப்படிப்பட்ட மனுஷ்யனைக் கட்டிக்கொண்டு நான் என்ன செய்வது? அன்றைக்குக்கூடச் சொன் னேன், இந்த அழுகிற குழந்தையை வைத்துக்கொண்டு என்னால் வீட்டு வேலை களையும் கவனித்துக் கொள்ள முடிய வில்லை என்று! ‘நான்தான் ஐந்தே ஐந்து ரூபாய் எடுத்துக் கொண்டு பாக்கியை அப்படியே உன்னிடம் கொடுத்து விடு கிறேனே, இன்னும் என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?’ என்று அரிச்சந்திர னுக்கு அடுத்த வீட்டுக்காரன் மாதிரி அலுத்துக் கொண்டாரே, அவர்? சாயந் திரம் வரட்டும், அவரை என்ன பாடு படுத்தி வைக்கிறேன், பார்!” என்றேன்.

“நன்றாய்ப் படுத்து! இந்தப் புருஷர்களே இப்படித்தான்! சொல்வது ஒன்று; செய் வது ஒன்று. நிஜமாகவே இவர்கள் இரு வருக்கும் நூறு ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறதோ, இன்னும் அதற்கு மேல் தான் கிடைக்கிறதோ — யார் கண்டது?” என்று மேலும் சந்தேகத்தைக் கிளப்பி விட்டாள் அவள்.

என்னையும் மீறிவந்த ஆத்திரத்தை ஒரு வாறு அடக்கிக் கொண்டு, “என்னமோ, எல்லாம் அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்!” என்றேன் நான்.

பிறகு, சிறிது நேரம் அவள் வழக்கம் போல் எங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றி யெல்லாம் பேசிக் கொண்டிருந்து விட்டு, “போய் வரு கிறேன்” என்றாள்.

அதற்குள் குழந்தை ராதையும் நல்ல வேளையாகத் தூங்கி விட்டாள். அவளைத் தொட்டிலில் கிடத்திவிட்டு, நான் அம்புஜத் துடன் வாசல் வரை சென்றேன்.

கருவேப்பிலைக்காரி வந்தாள். அவளை யழைத்துத் திண்ணையண்டை விட்டுவிட்டு, உள்ளே சென்றேன் — ஒரு கை அரிசி கொண்டு வருவதற்காக.


தனிக் குடித்தனம் செய்வதில் சௌகரியம் இருந்தாலும், கஷ்டமும் இல்லாமற் போகவில்லை. ஒரு நாளைப் போல் இன்னொரு நாள் கடைக்குப் போய் வர அவருக்குச் சௌகரியப் படுகிறதா, என்ன? அம்மாதிரி நாட்களில் எனக்குத் தெருவோடு போகும் அங்காடிக் கடைக் காரர்களை விட்டால் வேறு வழியே கிடையாது.

★

“ஏ, அம்மா! நேரமாவுது, அம்மா! சீக்கிரம் வா, அம்மா!”

“என்னடி அப்படிப் பறக்கிறே? அரிசி எடுத்துக்கொண்டு வர வேண்டாமா?”

“ஐயோ! காத்தாலே பொறப்படறு போதே, அவரு ‘சீக்கிரமா வா!’ன்னாரு. நேரம் கழிச்சப் போனா அவரு என்னை அடிச்சுக் கொன்னுப்பிடுவாரே!”



“அட வாருடா, இவங்க? நம்ப பிழைப்பிலே மண்ணைப் போட்டு விட்டாங்களே? நீயும்

"அது யாரடி, அவர்?"

"எம் புருசன், அம்மா!"

"ஏன், அவன் எங்கேயாவது வேலை வெட்டிக்குப் போவதில்லையா?"

"ஐயோ, அம்மாடி! அவரு எங்கேயாச்சும் வேலை வெட்டிக்குப் போவாம, வூட்டிலே சும்மாயாச்சும் குந்திக்கிட்டு இருந்தாலும் பரவாயில்லையே! அடிக்கொரு தரம் எங்கேயாச்சும் திருடி விட்டுப் போலீஸ்காரனுங்க கிட்ட அகப்பட்டுக் கிடுவாரு! என்னை ஒண்டியா வுட்டுட்டு ஜெயில்லே இருந்துட்டு வருவாரு. 'மவராசனுங்க அவரை எப்பவும் அப்படியே ஜெயில்லே வச்சிருக்க மாட்டானுங்களா!'ன்னு எனக்குத் தோணும்! ஏன்னு, அந்த மனுசன் வூட்டிலேயிருந்தா எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தோசமே கெடையாது. அவரு இல்லாதப்போவாவது இந்தக் கரிப்பிலே வித்துக் கெடைக்கும் அரிசியைக் கஞ்சி காய்ச்சி வயிறாரக் குடிப்பேன். அவரு இருந்தா எல்லா அரிசியையும் வித்துக் காசை அவருக்குக் குடிக்கக் கொடுத்துடணும். இல்லாவிட்டா அடிச்சுக் கொன்னுப்பிடுவாரு! அதுவும் சீக்கிரம் சீக்கிரமா! எல்லாத்தையும் அவரு கிட்ட குடுத்துட்டு நானும் குழந்தையும் பட்டினி கெடக்க முடியுமா? அதாலே, அவருக்குத் தெரியாம இந்த முந்தானையிலே கொஞ்சம் அரிசி முடிஞ்சி வச்சுக்கிட்டுத்தான் நான் பாக்கியை விப்பேன். வித்த காசை அந்தக் கட்டையிலே போறவன் கையிலே கொடுத்துட்டு, 'கடவுளே!'ன்னு குடிசைக்கு வருவேன். முந்தானையிலே முடிஞ்ச அரிசியை அவிழ்த்துக் காய்ச்சி, நான் கொஞ்சம் குடிச்சிட்டு— இந்தக் கொழந்தைக்கும் ரெண்டு பாலாடை ஊத்திட்டு—அந்த மனுசனுக்கும் கொஞ்சம் எடுத்து வச்சிருப்பேன்......!"

"அப்படிப்பட்டவனுக்கு நீ என்னடி அந்தக் கஞ்சியிலே கொஞ்சம் மீந்தி வைக்கிறே? எல்லாவற்றையும் நீயே குடித்து விட்டு, வெறும் பானையை அவனுக்கு முன்னால் உருட்டி விடுகிறதுதானே?"

"நல்லாச் சொன்னே, அம்மா! அப்படிச் செஞ்சா அந்தப் பானை ஆயிரஞ் சுக்கலாப் போகும்; அத்தோட என் தலையும் ஆயிரஞ் சுக்கலாப் போகும்! அதுவும் இல்லாம, 'என்னடி சோறு ஆக்கலே?'ன்னு என்னமோ கொண்டாந்து குடுத்தவன் மாதிரி ஏக அதிகாரமாக் கேட்டு, என்னை ஒதை ஒதைன்னு ஒதைச்சுத் தொலைச்சுப் பிடுவானே!"


"நல்ல கதைதாண்டி, உன் கதை!— அவன்தான் வீட்டிலே சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறானே, இந்தக் குழந்தையை நீ ஏன் முதுகிலே சுமந்து கொண்டு திரிய வேண்டும்? அவனிடம் இதை விட்டுவிட்டு வரக்கூடாதோ?"

"அதுக்குக்கூட அவரு ஒப்ப மாட்டாரு, அம்மா! 'அந்தக் கொழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ள முடியாம அப்படி என்னடி நீ வேலை செஞ்சு கிழிச்சுப் பிடறே?'ன்னு எரிஞ்சு விழுவாரே, அவரு!"

"அந்த 'அவரு' மட்டும் என்ன செய்து கிழித்து விடுகிறாராம்?" என்று கேட்டேன் நான் எரிச்சலுடன்.

"என்ன இருந்தாலும் என்னைத் தொட்டுத் தாலி கட்டின புருசன்! அப்படியெல்லாம் நான் அவரை எதிர்த்துக் கேட்கலாமா, அம்மா?"

"அடி, பைத்தியக்காரி! உன்னைப் பற்றி அவன் நன்றாய்த் தெரிந்துகொண்டுதான்



பாம்பும் சண்டை போடுவதை விட்டுட்டு, அவங்க சண்டையைப் பார்க்க ஓடிவிட்டாங்களே!"

அப்படி மிரட்டு மிரட்டு என்று மிரட்டுகிறான்! எங்களவர் இருக்கிறாரே, அவர் என்னை அப்படிக் கேட்டால் நான் என்ன செய்வேன், தெரியுமா?—பிய்த்துப் பிரி கட்டி விட மாட்டேனா?"

"உங்களோடு என்னையும் சேர்த்துப் பேச முடியுமா, அம்மா?"

"சரி சரி, இந்தா அரிசி!—நீ கருவேப்பிலை போடு!" என்று அலுத்துக்கொண்டே நான் அரிசியை அவள் நீட்டிய மூக்கில் தட்டில் கொட்டினேன். அதைப் பெற்றுக் கொண்டு அவளும் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

அவள் தெருக் கோடி திரும்பும் வரை, "கரிப்பிலை வாங்கலையோ!" "கரிப்பிலை வாங்கலையோ!" என்ற குரல் என் காதில் ஒலித்துக்கொண்டே யிருந்தது.

★

அது என்னமோ தெரியவில்லை, அன்று முழுவதும் அந்தக் கருவேப்பிலைக்காரியை என்னால் மறக்கவே முடியவில்லை. "உங்களோடு என்னையும் சேர்த்துப் பேச முடியுமா, அம்மா?" என்ற அவளுடைய கேள்வி என் மனதை விட்டு அகலவே யில்லை.

ஆமாம், அவளோடு என்னையும் சேர்த்து ஏன் பேசக் கூடாது? ஜாதியில் வேண்டுமானால் உயர்வு தாழ்வு இருக்கலாம்; வாழ்வில் வேண்டுமானால் உயர்வு தாழ்வு இருக்கலாம்; பிறப்பில்? நானும்தான் பெண்ணாய்ப் பிறந்தேன்; அவளுந்தான் பெண்ணாய்ப் பிறந்திருக்கிறாள்!

ஆனாலும் மனோபாவத்தில் அவளுக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசம்!

அவனால் இவளுக்கு ஒரு காலணாவுக்கு வழி கிடையாது; திருடி விட்டு ஜெயிலுக்குப் போவான்; வீட்டில் சும்மா இருக்கும் அவன் அந்தக் குழந்தையைக்கூடத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க மாட்டான்; அதையும் நாளெல்லாம் அவள் முதுகில் சுமந்து கொண்டு திரிய வேண்டும்; இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு இவள் சம்பாதித்து எடுத்துக் கொண்டு போய் அவனுக்குக் குடிக்கக் கொடுக்க வேண்டும்; அதிலும் அவசரம் அவசரமாக; இல்லையென்றால் அவன் இவளை அடித்துக் கொன்று விடுவான்; இவை யெல்லாவற்றையும் விட தான் சம்பாதித்த அரிசியில் தானே கொஞ்சம் திருடி எடுத்துக் கொண்டு போய்ச் சமைத்து, தானும் சாப்பிட்டு அவனுக்கும் கொஞ்சம் எடுத்து வைப்பது போன்ற பரிதாபம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

இந்த அழகான வாழ்க்கையில் அவனிடம் இவளுக்கு என்ன பயபக்தி!—எவ்வளவு அடக்க ஒடுக்கம்!

என்ன இருந்தாலும் அவன் அவளைத் தொட்டுத் தாலி கட்டிய புருஷனாம்! அவனை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசக் கூடாதாமே!

பாவம், தீராத வியாதிக்கு ஆளாகியிருந்தும் வேசி வீட்டுக்குப் போக ஆசைப்பட்ட அயோக்கியனைக் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு சென்ற பைத்தியக்காரி நளாயினியின் கட்டுக் கதையைக் கேட்டு ஏமாந்தவர்கள் இந்த உலகத்தில் எத்தனையோ பேர் இல்லையா? அவர்களில் இந்தக் கருவேப்பிலைக்காரியும் ஒருத்தி போலிருக்கிறது!

அப்பப்பா! அவளுடைய துரதிர்ஷ்டத்தைப் பார்க்கும்போது என்னுடைய அதிர்ஷ்டம் எவ்வளவோ தேவலைபோலிருக்கிறதே!

ஐந்து ரூபாய்!—ஆம், ஐந்தே ஐந்து ரூபாய்!—அதையும் எனக்குத் தெரிந்து எடுத்துக் கொள்ள அவருக்குத் தைரியமில்லை! எனக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்வதற்காக இத்தனை நாளும் அவர் என்னிடம் பொய் சொல்லி வந்திருக்கிறார்!—



கடைக்காரன்:—என்னப்பா இது? துணியை எடுத்துக் காட்டினுள் அதைப் பிடிச்சுக் கிழிச்சுட்டியே?

வந்தவன்:—கோவிச்சுக்காதே அப்பா, நான் டிராம்லே இன்ஸ்பெக்டரா யிருக்கேன். டிக்கட்டை வாங்கிக் கிழிக்கிற ஞாபகத்திலே கிழிச்சுட்டேன்! —ராஜு.

எனக்குப் பயந்துதான்; ஆம், என்னுடைய வாய்க்குப் பயந்துதான்!

இத்தனைக்கும் பாவம், எல்லாம் அவரே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணம். எனக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது — செலவழிப்பதைத் தவிர!

"அழுகிற பிள்ளையை வைத்துக் கொண்டு அடுப்புக் காரியத்தையும் என்னால் கவனிக்க முடியாது!" என்று நான் அடித்துச் சொல்லும்போதுகூட, அவர் அந்தக் கருவேப்பிலைக்காரியின் கணவனைப்போல் "அதைவிட நீ என்ன வேலை செய்து கிழித்து விடுகிறாய்?" என்று என்னை எதிர்த்துக் கேட்பதில்லை.


"என் செலவுக்கு எடுத்துக் கொண்டது போக மீதியைத்தான் உன்னிடம் கொடுத்து விடுகிறேனே, முடியுமானால் ஆள் வைத்துக் கொள்ளேன்!" என்று அடக்கத்துடன்தான் பதில் சொல்லுகிறார். ஆனால் மறைமுகமாக, "என்னுடைய செலவுக்கு மேற்கொண்டு ஐந்து ரூபாய் தேவையாயிருக்கிறது; உனக்குத் தெரிந்தால் எரிந்து விழுவாயே என்று தெரியாமலே எடுத்துக் கொண்டு விடுகிறேன்!" என்று இத்தனை நாளும் என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்!

அப்படித்தான் எடுத்துக் கொள்கிறாரே, அதையாவது தன் சொந்த உபயோகத்துக்காகச் செலவழித்துக் கொள்கிறாரோ என்று எண்ணிப் பார்த்தால் 'இல்லை' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அடிக்கடி எனக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து என்னைத் திருப்திப் படுத்த முயலுகிறாரே, அதற்கு வேண்டியகாசு அவருக்கு எங்கிருந்து வரும்? இப்படி ஏதாவது எடுத்துக் கொண்டால் தானே உண்டு? ஒரு நாளாவது இதைப் பற்றி நான் யோசித்துப் பார்த்தேனா?

அப்பாவி மனுஷர், பாவம்! உண்மை தெரியாமல், "சாயந்திரம் வரட்டும், அவரை என்ன பாடு படுத்தி வைக்கிறேன், பார்!" என்று அம்புஜத்திடம் சொன்னேனே, இது நியாயமா?

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த எனக்குப் பொழுது போனதே தெரியவில்லை. அவர் வரும் காலடிச் சத்தம் கேட்டுத்தான் எழுந்தேன்.

ஏனோ தெரியவில்லை; அவரைக் கண்டதும் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாக நான் 'களுக்'கென்று சிரித்து விட்டேன்.



"என்னப்பா, குதிரை நல்லாபோவுமா? கல் தடுக்கினும் கீழே விழுந்திடும் போலிருக்கே?"

"ஓடினாத்தானுங்களே கல் தடுக்கும்? நம்ப குதிரை தான் பறக்குங்களே!"

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே, அவர் ஒன்றும் புரியாமல் தம்முடைய முகத்தை ஓடோடியும் போய்க் கண்ணாடியில் பார்த்துக் கொண்டார்!

"முகத்தில் ஒன்றுமில்லை; மனத்தில்தான் இருக்கிறது!" என்று நான் அழுத்தத்துடன் சொல்லிக் கொண்டே காப்பியைக் கொண்டு போய் அவருக்கு முன்னால் வைத்துவிட்டு, "நிஜத்தைச் சொல்லுங்கள், உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?" என்று கேட்டேன்.

"இதென்ன கேள்வி, திடீரென்று?"

"சொல்லுங்களேன்!"

"ஏன், சரியாகத் தொண்ணூற்றைந்து ரூபாய்தான்!"

"பொய், பொய்! எனக்குத் தெரியவே தெரியாது என்று நினைத்தீர்களா......?"

"இல்லை, லல்லு! எனக்குச் சம்பளம் நூறு ரூபாய்தான்! உன்னிடம் உண்மையைச் சொன்னால்........." என்று அவர் திகிலுடன் ஆரம்பித்தார்.

"என்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன, நான் 'வேண்டாம்!' என்றா சொல்லியிருக்கப் போகிறேன்?" என்று போட்டேன் ஒரு போடு!

என்னை அப்படியே கம்பி விட்டார் அவர்! "உன்னுடைய மனசு இவ்வளவு தங்கமான மனசு என்று இதுவரை எனக்குத் தெரியாமலே போய்விட்டது, லல்லு!" என்றார் உருக்கமுடன்.

அவர் சொல்லுகிறாரே, நீங்கள் சொல்லுங்கள்: அவர் நினைக்கிறபடி என் மனசு என்ன, அவ்வளவு தங்கமான மனசா?

சோகக் கதை!

ஸோமாஸ்

"ஸார், பரமானந்தராயர் வீடு எது?" என்று அந்தப் பிச்சைக்கார வாலிபன் கேட்டதும் ராமச்சந்திரனுக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது.

"நீ யாரப்பா? எங்கேயிருந்து வருகிறாய்? பரமானந்தராயரை உனக்கு எப்படித் தெரியும்? அவரை நீ பார்த்திருக்கிறாயா?"—இப்போது ராமச்சந்திரன் குரலில் ஒருவித ஏளனம் தொனித்தது.

"ஜகதீசா! இதுவும் உன் சோதனையா? இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்வேன்?" என்று அந்தப் பிச்சைக்கார வாலிபன் கண்களில் நீர் மல்க ஆகாயத்தை நோக்கி அண்ணாந்த வண்ணம் நாத் தழுதழுக்க நாடகமேடைப் பாணியில் கூறியதும் ராமச்சந்திரனின் கண்களிலும் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"அப்பா, கவலைப்படாதே! பரமானந்தராயர் உனக்கு என்ன வேண்டும்? பந்துவா?"

"ஆம், ஐயா! பரமானந்தராயர் என்னுடைய சாக்ஷாத் தகப்பனார்! நான் அவர் மூதல் மனைவியின் புத்திரன். பிறக்கும் போதே தாயைப் பரலோகத்துக்கு அனுப்பிவிட்டேன். அப்போது என் தகப்பனார் பரமானந்தராயர் மதுரையிலிருந்தார். என் ஏழாவது வயதில் அவருக்கு இரண்டாம் விவாகத்தில் சபலம் தட்டியது. விவாகமும் நடந்தது. அடுத்த வருஷம் என் தகப்பனார் என்னையும் சித்தியையும் அழைத்துக்கொண்டு அறுபத்து மூவர் விழாவுக்காகச் சென்னைக்கு வந்தார். அந்த விழாக் கூட்டத்தில் நான் எங்கேயோ தவறிவிட்டேன். அவரும் அக்கரை எடுத்துக்கொண்டு என்னைத் தேடவில்லை. பதினேழு வருஷங்களுக்குப் பிறகு எங்கேயெல்லாமோ விசாரித்துக்கொண்டு தகப்பனாரைப் பார்க்க வருகிறேன்......!"

இந்தச் சோக சரிதம் ராமச்சந்திரனைக் கலங்க வைத்துவிட்டது. "அப்பா, உன் சரித்திரம் என்னை அசோக வனத்துக்குக் கொண்டு போய் விட்டது. நீ மிகவும் களைப்பாயிருக்கிறாய். அந்த ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள். நான் முதலில் பரமானந்தராயரைப் பார்த்து உன்னைப் பற்றிச் சொல்லிவிட்டு வருகிறேன். அப்புறம் அவரைப் பார்க்கலாம்!" என்று கூறிச் சாப்பாட்டுக்குப் பணம் கொடுத்தான். அவன் மனைவி பிறந்த வீட்டுக்குப் போயிருந்தபடியினால் வீட்டில் அவனைத் தவிர யாரும் இல்லை. வாசல் திண்ணையில் அந்த வாலிபனைப் படுக்கச் சொல்லிவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு பரமானந்தராயர் வீட்டுக்குச் சென்றான்.

"ஸார், நமஸ்காரம்! இத்தனை நாட்களாக எனக்குத் தெரியவே தெரியாதே...!" என்று ராமச்சந்திரன் ஆரம்பித்தான்.

"என்ன உனக்குத் தெரியாது? எனக்குத்தான் உனக்கு ஒரு தம்பியிருக்கிறான் என்று இதுவரை தெரியாது! ஐயோ! அந்தப் பையன் உங்கள் குடும்பக் கதையையெல்லாம் கல்லும் கசிந்துருகும்படி சொன்ன காட்சி உண்டே... அஹா! அவனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தேன்...!"

"என்ன! எனக்குத் தம்பியா? எனக்குத் தம்பியே கிடையாதே! யாரோ ஒரு பையன் என் வீட்டுக்கு வந்தான். உங்கள் மூத்த தாரத்தின் பிள்ளையென்று கூறி என்னிடம் ஒரு சோகக் கதை சொன்னான்! நான் அவனுக்குச் சாப்பாடு போட்டு அங்கேயே படுக்கச் சொல்லிவிட்டு உங்களிடம் சமாசாரத்தைச் சொல்லலாம் என்று வந்தேன்!"

"சரி, சரி! அப்புறம் பேசலாம். நீ முதலில் உன் வீட்டுக்குப் போய் அவனைப் பார்த்துவிட்டு வா!" என்றார் பரமானந்தராயர்.



ராமச்சந்திரன் வீட்டுக்கு ஓடோடியும் வந்தான். கதவு திறந்து கிடந்தது. வெள்ளிப் பாத்திரங்கள் வைத்திருந்த பெட்டி உடைக்கப்பட்டிருந்தது. பாத்திரங்களைக் காணவில்லை. திறந்த கதவும் உடைந்த பூட்டும் சோகக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தன!

புதுப் பணம்

ஆர். எஸ்.

அன்று வழக்கத்துக்கு விரோதமாக மிஸ்டர் சுப்பிரமணியம் ஆபீஸிலிருந்து சீக்கிரமே திரும்பிவந்து, "இதோ பார், ராஜி! நமக்கு வந்திருக்கும் அதிர்ஷ்டத்தை! நான் ஐந்து வருஷ காலமாக யுத்த சேவை செய்ததற்காகக் கருணையம் மிக்க சர்க்கார் எனக்கு ரூபாய் 1500 போனஸாகக் கொடுத்திருக்கிறார்கள்!" என்றார் சந்தோஷத்துடன்.

சாதாரண நாட்களாக இருந்திருந்தால், அவர் சொல்லி முடிப்பதற்குள் ராஜி மிக்க ஆனந்தப்பட்டிருப்பாள். அன்று என்னமோ தெரியவில்லை, ஒரே சோகமாயிருந்தாள்.

"ஏன், சிவில் சப்ளை ராமு வீட்டில் உன்னைக் கூப்பிடவில்லையா? அவர்கள் வீட்டுக் குழந்தைக்கு இன்றுதானே ஆண்டு நிறைவு?"

"ஆமாம். கூப்பிடாமல் என்ன? என்ன இருந்தாலும் மனுஷாளுக்குப் புதுப் பணம் வந்து விட்டால் கர்வமும் தானாக வந்து விடுகிறது! நீங்கள் ஆபீஸுக்குப் போனதும் நான் என் கைக் காரியங்களை முடித்து விட்டு அவர்கள் வீட்டுக்குப் போனேன். ஒரு வாய் காப்பிகூடக் கொடுக்கவில்லை!"

"ரேஷன் காலமேயல்லவோ!"

"அதுதான் போகட்டும். ஆசீர்வாதத்தின் போது எல்லோரும் ஒரு ரூபாயும் இரண்டு ரூபாயுமாக ஓதியிட்டார்கள். நானும் உங்கள் பெயரைச் சொல்லிச் சாஸ்திரிகளை விட்டு ஐந்து ரூபாய் ஓதியிடச் சொன்னேன். உடனே அவர் வீட்டுப் புருஷாள் எல்லோரும் ஒருவருக்கொருவர் ஏதோ குசு குசு என்று பேசிக்கொண்டு சிரிக்க ஆரம்பித்தார்கள். சாப்பிடும்போதுகூட அவர் வீட்டுப் பெண்கள் எல்லாம் என்னையே உற்றுப் பார்த்துச் சிரித்தார்கள். எனக்கென்னவோ அப்போதிலிருந்து துக்கம் துக்கமாக வருகிறது!"

சுப்பிரமணியத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் நீண்ட நேரம் யோசனை செய்த பிறகு, "சரி, ராஜி! நீ எந்த மணிபர்ஸிலிருந்து ரூபாய் எடுத்துக் கொண்டு போனாய்?" என்று கேட்டார்.

"ஏன், நாடா போட்டுக் கட்டி வைத்திருக்கும் உங்கள் பெரிய மணி பர்ஸிலிருந்துதான்!"

அவ்வளவுதான்; மிஸ்டர் சுப்பிரமணியம் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார். "அட அசடே! நம் எதிர் வீட்டு மீனாக்ஷிப் பாட்டியின் பேரன்கள் போன வாரம் ரங்கூனிலிருந்து வந்தார்களோல்லியோ! அவர்களிடமிருந்து மாதிரிக்காக நாலைந்து ஜப்பானிய நோட்டுகள் வாங்கி வைத்திருந்தேன். அதைக் கொண்டு போய் நீ ஓதியிட்டு விட்டாய்! அதனால்தான் அவர்கள் அப்படிச் சிரித்திருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் புதுப்பணம் படைக்கவில்லை. நீதான் ரங்கூனிலிருந்து வந்திருந்த புதுப் பணத்தைக் கொண்டுபோய் ஓதியிட்டிருக்கிறாய். புதுப் பணம் படைத்தவள் நீதான்!" என்றார்.

காலக்ஷேபம்

நீடூழி வாழ்க!

ஒருவர்:—நான் அநேக கதைகளும் கவிதைகளும் எழுதி வைத்திருக்கிறேன். அவை எல்லாம் என் வாழ்நாளுக்குப் பிறகுதான் பிரசுரமாக வேண்டும் என்பது என் விருப்பம்.

மற்றவர்:—அப்படியா? நீங்கள் நீடூழி வாழ்ந்திருக்க வேண்டும்!

★

நல்ல இடம்!

மாமா:—ஆப்பிரிக்காவிலே சில இடங்களில் பள்ளிக்கூடங்களே கிடையாது!

மருமான்:—நாம் அங்கே குடிபோனால் என்ன, மாமா?

★

நல்ல யோசனை!

"உன் மாமியாருக்கு என்னத்துக்கு ஏகமாகச் செலவழித்து வைத்தியம் பண்ணுகிறாய்? உனக்குத்தான் அவளைக் கண்டால் பிடிக்கவில்லையென்பாயே!"

"வியாதியாகப் படுத்த அப்புறம் அவளுக்குப் பாலும் பழமும் கொடுத்துக் கட்டுப்படியாகவில்லை, அப்பா! அதற்காகத்தான் அவளுடைய வியாதியையே பூரணமாகச் சொஸ்தப்படுத்தி விடலாமென்று பார்க்கிறேன்!"

கடிகார சோதனை!

திருடன்:—ஏய், உன் கடிகாரத்தை இப்படிக் கழற்றிக் கொடு!

வழிப்போக்கன்:—ஐயோ! என்னிடம் கடிகாரமே இல்லையே!

திருடன்:—ஏன் அப்பா, பொய் சொல்கிறாய்? இதோ 'டக்டக்' என்று அடிக்கிறதே!

வழிப்போக்கன்:—ஐயையோ! அது கடிகாரமில்லை! என் நெஞ்சு அல்லவா அப்படி அடித்துக் கொள்ளுகிறது!

★

உண்மை கூடாது!

"பெரிய மனிதர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய ஒரு புத்தகம் வெளியிடப் போகிறேன். அந்தப் புத்தகத்தில் தங்களைப் பற்றிய குறிப்பையும் சேர்க்க வேண்டும் என்பது என் விருப்பம். உங்களுக்கு அதில் ஒன்றும் ஆக்ஷேபனையில்லையே!"

"எனக்கு ஒரு ஆக்ஷேபனையும் இல்லை. ஆனால் அந்தக் குறிப்புகள் மட்டும் உண்மையாக இருக்கக் கூடாது; அவ்வளவுதான்!"

தண்டனை

கோமதி ஸ்வாமிநாதன்

என் இருபது வருஷ உத்தியோக காலத்தில் நான் மனதாரச் செய்தது அந்தத் தவறு ஒன்றுதான். அது சட்டத்துக்கு விரோதமான காரியமாக இருந்த போதிலும் அதை நான் என் மனச் சாக்ஷியின் ஆதரவுடன்தான் செய்தேன். அது ஒரு சாதாரணக் கடிதம்தான். ஆனாலும், அதிலுள்ள விஷயம் ஒரு குடும்பத்தையே நிலைகுலையச் செய்யக்கூடியது. ஆகையால், அதை அந்த வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்க எனக்குத் தைரியமில்லை. அதைக் கிழித்துத் தூள் தூளாகப் பறக்க விட்டு விட்டு மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு நடந்தேன்.

அக்கிரகாரத்துக்குள் நுழைந்ததும் நான் யாரைப் பார்க்கக்கூடாது என்று நினைத்துக் கொண்டு போனேனோ, அந்த நபரைத்தான் முதலில் பார்க்க நேர்ந்தது. அவள் தான் அலமு. அவள் என்னைக் கண்டதும் "நாயுடு! காகிதம் இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே திண்ணைக்கு வந்தாள். பிறந்தது முதல் அவளை எனக்குத் தெரியும். அவள் குழந்தையாக இருந்தபோது நான் எத்தனையோ நாள் அவளைத் தூக்கிச் சுமந்திருக்கிறேன்.

அலமு கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் நான் காகிதக் கட்டைப் பார்ப்பதுபோல் சிறிது நேரம் பாசாங்கு பண்ணினேன். "அவரிடமிருந்து கடிதத்தையே காணோம்!" என்று அவள் மெதுவாகச் சொல்லிக் கொண்டாள். "காகிதம் நாளைக்கு வரும், அம்மா!" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தேன்.


அவள் எதிர்பார்க்கும் கடிதம்தான் இனிமேல் அவளுக்கு வரப்போவதே இல்லையே! "பேதைப் பெண்ணே! உன்னுடைய 'அவர்' இனிமேல் எழுதமாட்டார்!" என்றது என் மனம்.

"போஸ்ட்மேன்! நீர் காகிதம் கொடுக்காமற் போனாலும், கொஞ்சம் கடலைச் சுண்டல் வாங்கிக் கொண்டாவது போம்!" என்று சொல்லிவிட்டு அவள் உள்ளே சென்றாள்.

அப்போதுதான் அன்று நவராத்திரி ஆரம்பம் என்பது என் ஞாபகத்துக்கு வந்தது.

சில வினாடிகளில் கனமான காகிதப் பொட்டணத்தைக் கொண்டு வந்து அவள் என்னிடம் கொடுத்தாள். நான் அதைப் பெற்றுக்கொண்டு, "வருகிறேன் அம்மா!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

அந்தப் பெண்ணை அன்று மாலை கண்டது முதல் என் மனதைப் பெரிய பாரம் அழுத்தியது. உடனே என்னுடைய மனக் குரங்கு பின் நோக்கிப் பாய்ந்தது.



அந்தச் சம்பவம் நடந்து சுமார் பதினைந்து வருஷங்களாகியிருக்கும். அப்போது அலமுவுக்கு ஐந்து வயது. நவராத்திரி சமயம். ஒரு நாள் மாலையில் தபால் கொடுத்துக் கொண்டு வரும்போது கிராமத்துக்கு வெளியிலிருந்த ஒரு மரத்தடியில் அலமு அழுதவண்ணம் நின்று கொண்டிருந்தாள். "சின்னம்மா! என்ன சமாசாரம்?" என்று கேட்டேன்.

என்னைப் பார்த்ததும் அவள் அழுகையும் விசும்பலும் அதிகமாயின. சிரமப்பட்டுச் சமாதானப் படுத்திக் கேட்டதில், வலது காது 'டோலக்' எங்கேயோ விழுந்துபோய் விட்டதாகவும் வீட்டுக்குப் போனால் அப்பா அடிப்பாரென்றும் சொல்லி மறுபடியும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

"அப்பாகிட்டே சொல்லி உன்னைக் கோவிச்சுக்காமே பாத்துக்கிறேன், வா!" என்று அவளைத் தூக்கிக்கொண்டு அவள் தகப்பனார் ராமய்யரிடம் கொண்டு போய் விட்டு, "சாமி! கோவிச்சுக்காதீங்க, ஒரு விஷயம் ......!" என்றேன். அவர் ஒன்றும் புரியாமல் விழித்தார். "குழந்தையைக் கோபித்துக் கொள்ளவில்லை என்று சொன்னால்தான் நான் சொல்லுவேன்! அது ஒரு சாமானைக் காணாமல் போக்கி விட்டது!" என்றேன் மறுபடியும்.



அவர் முகத்தில் கோபக் குறி தோன்றியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "என்னத்தைத் தொலைத்து விட்டாள்? சீக்கிரம் சொல்லும்!" என்று அவசரப்பட்டுக் கேட்டார்.

அப்போது அலமு என் கையைப் பிடித்துக்கொண்டு தகப்பனார் முகத்தைப் பார்க்காமல் நின்றுகொண்டிருந்தாள். "ஒரு டோலக்கைக் குழந்தை தொலைச்சு விட்டது. உங்களுக்குப் பயந்து அழுதுக்கிட்டே இருந்தது. நீங்க ஒண்ணும் சொல்லக் கூடாது!" என்றேன்.

ராமய்யர் வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, "நல்ல பொண்ணு! தலைகால் தெரியாமல் குதிப்பானேன்?" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

அலமு நன்றியறிதலுடன் என்னை ஒரு பார்வை பார்த்து விட்டு உள்ளே போய்விட்டாள்.

★

ராமய்யர் அந்தப் பள்ளிக்கூடத்தில் ஓர் உபாத்தியாயர். அவர் எந்த இடத்துக்கும் மாறவில்லை. நானும் மேலதிகாரிகள் தயவால் அந்த ஊரிலிருந்து மாறுதல் இல்லாமல் ஏற்பாடு செய்து கொண்டேன்.

நான்கு வருஷங்களுக்கு முன் அலமுவுக்கு விவாகத்தை நடத்தினார் ராமய்யர். மாப்பிள்ளை மூர்த்திக்குப்

பந்து வர்க்கங்கள் ஒருவருமில்லை. அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்துக்கு உபாத்தியாயராக வந்து சேர்ந்திருந்தான். அவனைத் தாஜா செய்து மாப்பிள்ளையாக்கிக் கொண்டார் ராமய்யர். அலமுவுக்கு இந்தக் கல்யாணத்தில் அபரிமிதமான சந்தோஷம். ராமமூர்த்தியின் அழகுதான் அதற்குக் காரணம். நான் அந்தச் சமயம் லீவிலிருந்ததால், ராமய்யருக்குக் கல்யாண விஷயமாய் அதிக உதவி செய்ய முடிந்தது. கல்யாணச் செலவிற்குக்கூட ராமய்யர் என்னிடம்தான் சொற்பத் தொகை கடனாக வாங்கிக் கொண்டார்.

சிறிது நாட்களுக்குள்ளாகவே ராமமூர்த்தி தனிக் குடித்தனம் வைத்துக் கொண்டான். அலமுவின் குடும்ப வாழ்க்கை இனிமையாக ஓடிக்கொண் டிருந்தது.

சில நாட்கள் கழித்து ஒரு நாள் ராமய்யரை நான் தனியாகச் சந்திக்க நேர்ந்தது. கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டார் அவர். விஷயத்தை விசாரித்தேன். "மாப்பிள்ளை ராணுவத்தில் சேரப் போகிறேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்கமாட்டேன் என்கிறான். குழந்தை மிகவும் கவலைப் படுகிறாள்!" என்றார்.

ராமமூர்த்தி ரொம்பவும் பிடிவாதக்காரன் என்று எனக்குத் தெரியும். இம் மாதிரி விஷயங்களில் நாம் யோசனை சொல்லத் தகுதியில்லை என்று நினைத்துக் கொண்டு பேசாமல் போய்விட்டேன்.

ஒரு மாதத்துக்குள் ராமமூர்த்தி ராணுவத்தில் போய்ச் சேர்ந்து விட்டான். தனக்கு நூறு ரூபாய் சம்பளமென்றும், அதில் ஐம்பது ரூபாயை மாதா மாதம் அலமுவுக்குக் குடும்பப் பணமாக அனுப்ப ஏற்பாடு செய்திருப்பதாகவும், தான் சந்தோஷமாகவே இருப்பதாகவும் அவன் அலமுவுக்குக் கடிதம் எழுதி யிருந்தான். அவன் எழுதின முதல் கடிதத்தை நான்தான் அப்போது அலமுவின் கையில் கொடுத்தேன். அவள் முகம் சந்தோஷத்தைக் காண்பித்த போதிலும் அதில் பூர்ணப் பொலிவு இல்லை.

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. ஒழுங்காக மணியார்டரும் கடிதங்களும் வந்து கொண்டிருந்தன. ஏழை ராமய்யருக்கு ராமமூர்த்தியின் பணம் மிகவும் ஒத்தாசையாக இருந்தது.

வாழ்க்கைப் பாதை இன்பச் சோலை வழியாக மாத்திரம் போவதில்லை; பொட்டல் தரையிலும் வெட்ட வெளியிலும் போகத்தான் போகிறது. இன்பச் சோலை வழியாகப் போய்க் கொண்டிருந்த அலமுவின் வாழ்க்கைப் பாதை அன்று முதல் எல்லையில்லாத பாலைவனத்தினூடே போக ஆரம்பித்தது. அவள் இன்ப வாழ்க்கையின் முடிவைத்தான் அன்று மாலை நான் ஒழித்து எறிந்த கடிதம் அறிவித்தது. ஆங்காங்கு அச்சிடப்பட்டு இடை யிடையே கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட அந்தக் கடிதத்தை நான் அகஸ்மாத்தாக வாசித்த போது என் மயிர் சிலிர்த்தது. "ரங்கூனில் ராணுவ முகாமில் யுத்த சேவை செய்துகொண்டிருந்த ராமமூர்த்தி இறந்து காலமானான்!" என்ற சமாசாரத்தைத்தான் அந்த உணர்ச்சியற்ற கடிதம் தாங்கி யிருந்தது. அந்தக் கடிதத்தை ராமய்யரிடம் கொண்டு சேர்க்க எனக்குத் தைரியமில்லை!

★

அன்று இரவு தபாலாபீசில் காவலாகப் படுத்துக் கொள்வது என் முறை. தூக்கமே வரவில்லை எனக்கு. அலமுவின் கதியைப் பற்றி நினைத்து நினைத்து என் மனம் புழுங்கிக் கொண்டே இருந்தது.



பாதி ராத்திரி இருக்கும். போஸ்ட் மாஸ்டர் அவசரம் அவசரமாக என்னை எழுப்பினார். "நாயுடு! ஓர் அவசரத் தந்தி இருக்கிறது. போய் உடனே பட்டுவாடா செய்து விட்டு வாரும்!" என்றார்.

எனக்குத் தூக்க மயக்கம். "தந்தி யாருக்கு சாமி?" என்றேன்.

"வாத்தியார் ராமய்யருக்கு! அவர் மருமகன் ஐந்து நாளைக்கு முன்னால் தவறிப் போனதற்கு இப்போதுதான் தந்தி வந்திருக்கிறது! கடிதம் எழுதியிருந்தால்கூட இதற்கு முன்னால் வந்திருக்கும்!" என்றார்.

அவருக்கு அன்று மாலை வந்த கடித விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால் நான் அதைக் கிழித்து எறிந்திருக்க முடியுமா?

"கடிதத்தைக் கிழித்தாயே, இப்போது தந்தியைக் கிழிக்க முடியுமா?" என்று கேட்டது என் மனம். இந்தத் துரதிர்ஷ்டச் சம்பவத்தை அறிவிக்கும் தூதனாக விதி என்னைப் பொறுக்கி எடுத்திருக்கும்போது அதற்கு விரோதமாக நான் என்ன செய்ய முடியும்? இல்லையென்றால் ஐந்து நாட்களுக்கு முன் கொடுக்கப்பட்ட தந்தி இன்று ராத்திரியில்தானா வரவேண்டும்? எனக்குச் சரியான தண்டனைதான். வேறு வழியின்றி தந்தியை எடுத்துக் கொண்டு ராமய்யர் வீட்டுக்கு ஓடினேன். 'தந்தி' என்ற வார்த்தையைக் கேட்டதுமே கை கால்கள் நடுங்க அவர் எழுந்து வந்தார். கையெழுத்தை வாங்கிக்கொண்டு தந்தியை அவர் கையில் திணித்தேன். ஒரே ஓட்டத்தில் ஆபீசுக்குத் திரும்பி வந்து விட்டேன். அவர் முகத்தைப் பார்க்கவே எனக்குத் தைரியமில்லை!

மறு நாள் 'டாக்டர் சர்டிபிகேட்'டின் மூலம் ஒரு மாத ரஜாவில் சென்றேன். பிறகு அந்த ஊருக்கு வராமலேயே வேறு ஊருக்கு மாற்றிக் கொண்டேன். ராமய்யரையாவது அலமுவையாவது அப்புறம் நான் பார்க்கவேயில்லை. இப்போது ஒரு விஷயத்தைப் புதிதாக நான் கற்றுக் கொண்டேன். அதாவது, பிறர் கடிதத்தை வாசித்துப் பார்த்து நான் பச்சாத்தாபப் படுவதில்லை. நான் அலமு விஷயத்தில் பச்சாத்தாபப் பட்டதின் பயனாகத்தான் தந்தியைக் கொண்டுபோய்க் கொடுக்கும் தண்டனை எனக்குக் கிடைத்ததே! கண்ணன் காட்டிய வழி போல், காரியத்தைச் செய்ய வேண்டியது நாம்; முடிவைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

வியாபார தந்திரம்

விதூஷகன்

"பகவதி விலாஸ்" காப்பி கிளப்புக்கு அந்தப் பிராந்தியத்திலேயே அபார செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. அந்தக் கடைக்கு நடந்த வியாபாரம் வேறு ஒரு கடைக்கும் நடந்ததில்லை. இத்தனைக்கும் எங்கேயோ ஒரு சந்து மூலையில் இருள் அடைந்த குகை போன்ற ஒரு கட்டடத்தில் தான் இருந்தது பகவதி விலாஸ்!

மேற்படி ஹோட்டல் முதலாளி ஹரிஹரய்யரின் கையில் பணம் அமோகமாகச் சேர ஆரம்பித்ததும், ஹோட்டலை விஸ்தரிக்க வேண்டுமென்று பல நண்பர்கள் அவருக்கு யோசனை சொன்னார்கள். "ஒரு ரேடியோகூட இல்லாமல் என்ன கிளப்பு ஸார் வேண்டியிருக்கு?" என்று அலுத்துக்கொண்டார் ஒரு நண்பர்.

மறுநாள் பகவதி விலாஸில் ரேடியோ ஒன்று அலறிற்று. ஹரிஹரய்யர் ரேடியோவை உச்சஸ்தாயியில் பாட விட்டுவிட்டு மார்பைக் குனிந்து பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். ஆனால், பாவம்! மறுநாள் முதற்கொண்டு வியாபாரம் ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்து போயிற்று.

தினம் பத்துத் தடவைக்குக் குறையாமல் விஜயம் செய்யும் வாடிக்கைக்காரர் ஒருவரை வழியில் கண்டு, "என்ன ஸார்! நீங்கள் கூட வருவதை நிறுத்திவிட்டீர்கள்? உங்களுக்காக ரேடியோகூட வாங்கி வைத்திருக்கிறேனே!" என்றார் ஹரிஹரய்யர்.

"என்ன போங்கள்! நிம்மதியாகச் சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று எந்தக் கடையில் நுழைந்தாலும் தலைவேதனையாக ஒரு ரேடியோ பாடுகிறது! உங்கள் கிளப் ஒன்றில்தான் அந்த உபத்திரவம் கிடையாது என்று இதுவரை ஜனங்கள் ஏராளமாய் வந்து கொண்டிருந்தார்கள்! இப்போது தாங்களும்தான் ரேடியோ வாங்கி விட்டீர்களே?" என்றார் அவர். அப்போது பார்க்கவேண்டுமே, ஹரிஹரய்யர் முகத்தை!




இரு நண்பர்கள்

ஆசிரியர் : சுதர்சன் மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

நந்தகிசோர் சொல்லுகிறான் :

1. இருளில் ஒளி

நான் பள்ளிக்கூடத்தில் படித்து வந்த காலத்தில், நண்பன் வித்யா சங்கரிடம்தான் எனக்கு வெகு பிரியம். அவன் மிகவும் நல்லவன்; கெட்டிக்காரன். அவனைப் போன்ற உழைப்பாளியான மாணவன் எங்கள் வகுப்பில் வேறு யாருமே கிடையாது. அவன் யாரிடமும் சண்டை சச்சரவு செய்து கொள்வதே இல்லை. பிறரைப் பற்றிக் குறை கூறும் வழக்கமும் கிடையாது. அவன் ஒரு நாள் கூடப் பள்ளிக்கு நேரம் கழித்து வந்ததில்லை. அவனுக்குப் பொய் சொல்லவே தெரியாது. குறும்புத்தனம் என்பதையே அவன் அறியான். வகுப்பில் அவன்தான் முதல். அவனுடைய குணங்களின் காரணமாக, உபாத்தியாயர்கள் அனைவரும் அவனைப் புகழ்ந்தார்கள். இந்தப் பையன் என்றைக்காவது ஒரு நாள் உயர்ந்த ஸ்திதிக்கு வந்து விடுவான் என்றும் நம்பினர். பெரிய மனுஷ்யனாக ஆவதற்கு வேண்டிய குணங்கள் எல்லாம் அவனிடமிருந்தன. அவன் ஏழை; தந்தையை இழந்தவன். அவனுடைய தாயார் தையல் வேலை செய்து சம்பாதித்து வாழ்க்கை நடத்துவதுடன், அவனைப் படிக்கவும் வைத்தாள். வைதவ்யம்,




ஏழைமை என்ற பயங்கரமான இருளில் வித்யாசங்கர் தான் அவனுக்கு வெகு தூரத்தில் 'மினுக் மினுக்' கெனப் பிரகாசிக்கும் நம்பிக்கையென்னும் ஒளியாக விளங்கி வந்தான். இந்த ஒளி வெளியுலகிற்கு மிகவும் சாதாரணமாகத் தோன்றக்கூடும். ஆனால் தாயாரின் கண்களுக்கு அதுதான் கோஹினூர் வைரத்தைக் காட்டிலும் பன்மடங்கு மதிப்புள்ளதாகத் தோன்றியது.

ஆனால் வித்யாசங்கரிடம் ஒரே ஒரு குறை உண்டு. அவன் தன் வகுப்புப் பிள்ளைகளுடன் நெருங்கிப் பழகுவது இல்லை. எவ்வளவுக் கெவ்வளவு முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு விலகியே இருக்க முயலுவான். ஒரு வேளை, அவனுடைய மனத்தில் உள்ள இயற்கையான பலவீனம்தான் இதற்குக் காரணமோ, என்னவோ? ஆனால் பையன்கள் அவன் 'தன் புத்திக் கூர்மையின் கர்வத்தில் மூழ்கி நம்மைப் பொருட் படுத்துவதில்லை' என்று எண்ணினர். ஆகையால் அவனை அனைவரும் வெறுத்தனர். இதன் பலனாக, உபாத்தியாயர்களின் அன்புக்குப் பாத்திரமாக இருந்தும், தன் வகுப்புப் பையன்களிடையே அவன் ஒதுக்கப்பட்டவன் போல நடத்தப்பட்டான். அந்த ஏழையை எவருமே தன்னருகில் உட்கார விடுவதில்லை. அவன் போய் உட்கார்ந்தாலும், யாரும் அவனுடன் முகம் கொடுத்துப் பேசுவதும் கிடையாது.

அவனுடைய நற்குணங்களும், புத்திக் கூர்மையும் இப்படித் திரஸ்கரிக்கப்படுவதை என்னால் காணச் சகிக்க முடியவில்லை. நான் அவன்பால் நட்புக் கொள்ளலானேன். சில சமயங்களில் பணம்—காசு கொடுத்தும் அவனுக்கு உதவி புரிந்தேன். சில மாதங்களுக்குள்ளேயே நானும் அவனும் நெருங்கிய நண்பர்களாகி விட்டோம். பள்ளிக்கூடத்தில் உள்ள மிகப் பெரிய பணக்காரப் பையனான எனக்கும் மிகவும் ஏழையான வித்யாசங்கருக்கும் இவ்வளவு நெருங்கிய நட்பு ஏற்படக்கூடும் என்பது பள்ளிப் பையன்களுக்கு நடக்கக் கூடாத ஆச்சரியமாகப் பட்டது. எங்களிருவரது நட்பு முற்றுவதைக் காண அவர்களுக்கு வியப்பாக இருந்தது. என்னுடைய சாமான், அவனுடைய சாமான் என்ற வித்தியாச பாவமும் ஒழிந்து விட்டது. அவன் எது வேண்டுமானாலும் என்னிடமிருந்து எடுத்துக் கொள்வான். நான் அவனைத் தடுத்தது இல்லை. அவனும் தன் படிப்பு நேரத்தைத் தனக்காக மட்டும் உபயோகித்துக் கொண்டதே இல்லை; என் மூளையில் ஏறாத விஷயங்களை யெல்லாம் ஏற்றி, என்னைப் பரீக்ஷையில் பாஸ் செய்யும்படி செய்வதற்காக வெகு பாடுபடுவான். 'இவன் பாஸ் செய்வதற்காக நாம் நம் படிப்பைக் கெடுத்துக் கொள்கிறோமே, நாம் பரீக்ஷையில் தேறாமல் போய்விட்டால் என்ன செய்வது?' என்று அவன் சிந்தித்ததே இல்லை.

அவன் வீடு எங்கள் தெருவிலேயே தான் இருந்தது. வீடா அது! ஒரு பழைய குடிசை. அதில்தான் அவனுடைய தாயார் சமையல் செய்து வந்தாள். அவனும் அங்கேயேதான் படித்து வந்தான். நான் சொன்னதன் பேரில் என் வீட்டில் வந்து படிக்கலானான். ஆனால் தன் வீட்டில்தான் சாப்பிடுவான். இரவு தூங்கவும் அங்கேதான் போய் விடுவான். என் பணக்காரத் தாய் — தந்தையருக்கு,' வித்யாசங்கருக்குச் சாப்பாடு போடுவதனால் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை.

“நீ சாப்பாட்டுக்காக என் வீட்டுக்குப் போகிறாய்? இங்கேயே சாப்பிடு. எங்களுக்கு நீயும், நந்த கிசோரும் ஒன்றுதான்!” என்றுகூட என் பெற்றோர் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், தன்னம்பிக்கை படைத்த வித்யாசங்கரின் உள்ளம் இதை ஒத்துக்கொள்ள வில்லை. அவன் மறுதளித்து விட்டதைக் கண்ட எங்களுக்கு அவன் மீது வெறுப்பு ஏற்படவில்லை; இன்னும் அதிகமான நன்மதிப்புதான் ஏற்பட்டது. அவன் பணம் காசைப் பொறுத்த வரையில் ஏழைதான். ஆனால், உள்ளத்தைப் பொறுத்த வரை ஒருநாளும் அப்படிச் சொல்லவே முடியாது.





2. நைனீதால் வாசம்

இவ்வாறு பள்ளி வாழ்க்கையில் பத்து வருஷங்கள் ஓடி மறைந்தன. நாங்களும் 'மெட்ரிக்' பரீக்ஷையில் தேறி விட்டோம். வித்யாசங்கருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. அவன் 'யுனிவர்ஸிடி'யிலேயே முதலாவதாக இருந்தான். எனக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கவில்லை. ஆனால் நானும் முதல் வகுப்பில் தேறி விட்டேன். இந்த வெற்றியில் எங்களிருவருக்குமே தனி மகிழ்ச்சி. வித்யாசங்கர் கலாசாலைக்கே முதலாவதாகத் தேறினதில் எனக்கு மகிழ்ச்சி. நான் முதல் வகுப்பில் தேறி விட்டதில் அவனுக்கும் மகிழ்ச்சி. ஆம், இவை யெல்லாம் அவனுடைய முயற்சியின் விளைவே. இல்லாவிட்டால், என்னைப் போன்ற மாணவன் பரீக்ஷையில் தேறுவது என்பதே எளிதல்லவே!



எங்கள் நட்பு இன்னும் வளர்ந்தது. என் தாய்-தந்தையரும் அவனைத் தம் பிள்ளையைப் போலவே பாவித்தனர். நான் ஒரு சமயம் நைனீதால் போக நேர்ந்த பொழுது என் உள்ளம் வேதனையுற்றது. 'வித்யா சங்கரைப் பிரிந்து நான் எப்படி இருப்பது' என்று எண்ணினேன். அதுவும் ஒரு நாள் இரண்டு நாளைக்கல்ல; மூன்று மாதத்துக்கு! என் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அப்பா என் நிலைமையை அறிந்து, "வித்யாசங்கரையும் அழைத்துக் கொண்டு போயேன்! இந்தக் கோடையில் அவன் இங்கிருந்து என்ன செய்யப் போகிறான்?" என்றார்.


மின்சார விசையை அழுக்கியதும் கும்பிருட்டில் வெளிச்சம் திடீரெனத் தோன்றுகிறதே, அதே போல என் இருள் சூழ்ந்த உள்ளத்திலும் ஒளி உண்டாயிற்று. வாடிய தாமரை மலர்ந்தது. உடனே அவனுடைய வீட்டுக்கு ஓடி, "உன் சாமான்களை யெல்லாம் மூட்டை கட்டு. நாளைக்கு நைனீதால் போகவேண்டும்" என்று குதூகலத்துடன் சொன்னேன்.

வித்யாசங்கர், என்னை அன்புடன் ஒரு முறை பார்த்துவிட்டுப் புன் முறுவலுடன், "நீ போய் வா! என் தலையில்தான் வக்னை வின் வெய்யிலில் கிடந்து மடிய வேண்டும் என்று எழுதி யிருக்கிறதே! நான் எங்கே வருவது?" என்றான்.

நான் பொய்க் கோபத்தை வரவழைத்துக்கொண்டு, "என்ன, வரமாட்டாயா? உன்னைக் குண்டுக் கட்டாகக் கட்டிக் கொண்டு போய் விடுவேன்!" என்றேன்.

"அது கிடக்கட்டும். நீ போய் எனக்கும் கொஞ்சம் காற்று வாங்கி அனுப்பு; போதும்!" என்றான் அவன்.

"வேடிக்கைப் பேச்சு எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். நீயும் என் பின்னோடு



வந்துதான் ஆகவேண்டும். ஒரு சுற்றுப் பார்த்துத் திரும்பி வரலாம், அப்பா!''

"நீ பார்த்துத் திரும்பி வா, போதும். நானே பார்த்து விட்டதாக எண்ணிக் கொள்கிறேன்!''

"நல்ல நல்ல காட்சிகள் எல்லாம் பார்க்கலாம். மனமும் மகிழ்ச்சி யடையும்.''

"நீ ஒவ்வொன்றையும் பற்றி விவரமாக எழுது. நீ உன் கண்களால் பார்த்ததை நான் படித்து மனக் கண்களாலேயே தெரிந்து கொண்டு விடுகிறேன்!''

"நம் வகுப்புப் பையன்கள் இன்னும் எவ்வளவோ பேர் வருகிறார்கள். தமாஷாகப் போய் விட்டு வரலாம்.''

"எனக்கெதற்கு இதெல்லாம்? நீ போய் வந்தாலே எனக்கு ரொம்ப சந்தோஷம்.''

"என்ன வித்யாசங்கர்! நீ நிஜமாகவே வரப்போகிற தில்லையா?''

வித்யாசங்கர் மிகவும் அமைதியாக, "நைனிதாலோ, பணம் படைத்தவர்கள் போய்ப் பார்க்க வேண்டிய இடம்! என்னைப் போன்ற ஏழைகளுக்கு அங்கே என்ன வேலை?'' என்று கேட்டான்.

"உனக்கு அதைப் பற்றி என் கவலை? நீ ஒரு தம்பிடி செலவழிக்க வேண்டாம். நீ உன் சாமான்களைக் கட்டிக்கொண்டு வண்டியில் ஏறு. மற்றதெல்லாம் என் பொறுப்பு!'' என்றேன் நான்.

வித்யாசங்கரின் கண்களில் கண்ணீர் சுரந்தது. "அப்பா, நீ முன்பு செய்த உபகாரங்களுக்கே ஒரு கணக்கு வழக் கில்லை. இன்னும்.........'' என்று அவன் ஆரம்பித்தான்.

"நீ இன்னும் என்னை வேற்று மனிதனாகவே எண்ணுகிறாய் போலிருக்கிறது?''

"அதற்கில்லை, அப்பா! நான் எப்படி அம்மாவைத் தனியாக விட்டுவிட்டு வர முடியும்?''

"நான், அப்பாவிடம் சொல்லி அதற்கெல்லாம் ஏற்பாடு செய்துவிடச் சொல்லுகிறேன்!''

"அதெல்லாம் வேண்டாம்; நீ மட்டும் போய் வா!''

"சரி, நீ வரப்போவ தில்லையே? அப்படியானால் நானும் போகவில்லை.''

"என்ன அப்பா, இது! அதற்குள்ளே கோபித்துக் கொள்கிறாயே? ஆமாம்; அங்கே வீடு கிடு பார்த்துவிட்டாயோ?''

"உனக்கேன் இந்தக் கேள்வி யெல்லாம்? நான் என்னவெல்லாமோ மனக் கோட்டை கட்டிக்கொண்டு உன்னிடம் வந்தேன். அதைத்தான் ஒரு நொடியில் தகர்த்து விட்டாயே! அப்புறம் கேட்பானேன்?'' என்று கூறிவிட்டு நான் வெளியே எழுந்து வந்து விட்டேன். வித்யா சங்கர் மறுபடியும் கூப்பிட்டு, "ஒரே ஒரு சமாசாரம் கேட்டு விட்டுப் போ!'' என்றான்.



நான் கழுத்தைத் திருப்பி ஒரு விதமான வறட்சி பாவத்துடன், “என்ன, சொல்லு?” என்றேன்.

“நீ எனக்காக உன் பிரயாணத்தை நிறுத்திவிடாதே! உன் உடம்புக்கு இந்தக் கோடை ஒத்துக் கொள்ளாது!” என்றான்.

நான் அவனைப் புண்படுத்த வேண்டுமென்று எண்ணி, “உன்னால் எனக்கு உடம்புக்கு வந்தால் வந்துவிட்டுப் போகிறது!” என்றேன்.

என்னுடைய சொல்லம்பு குறி தப்பவில்லை. வித்யாசங்கர் என்னருகில் வந்து தோளில் கை போட்டுக்கொண்டு என்னைச் சமாதானப் படுத்த முயன்றான்.

“நீ வராவிட்டால் நான் போகப் போவதில்லை!” என்று திட்டமாக நான் மறுதளித்து விட்டேன்.

கடைசியில் வித்யாசங்கர் என் வழிக்கு வந்துவிட்டான். மறுநாள் நாங்கள் லக்னௌவிலிருந்து புறப்பட்டு விட்டோம். கோடையின் அந்த மூன்று மாதங்களும் மிக மனோரம்யமாகவும் இனிமையாகவும் ஆனந்தமாகவும் கழிந்தன. அதைப் பற்றி இன்று நினைத்தாலும் மனதில் ஒருவித இன்ப வேதனை எழுகிறது. அன்பில் ஊறி, ஆனந்தத்தில் மூழ்கித் திளைத்த அந்த இன்ப நாட்கள் எங்கேயோ ஓடி மறைந்து விட்டன. தெய்விகக் கதைகளைப் போன்று — மனோரம்யமான கனவு கீதங்களைப் போன்று — இனிமையான சகோதர சகோதரிகளின் அன்பைப் போன்று பரிசுத்தமானவை யல்லவா, அந்த இன்ப நாட்கள்!



“பாக்யநாதா! நீங்கள் [illegible] பாட்டுக்காக நான் தங்களுக்கு [illegible] ரூபாய் கொடுப்பேன்!”

“வேண்டாம், வேண்டாம்: நீங்கள் எனக்குக் கொடுக்கவேண்டிய பத்து ரூபாயைத் திருப்பிக் கொடுங்கள்: அதுவே போதும்.”

3. ஜூபிலி காலேஜ்

ஆனால் அந்தோ! அந்த மூன்று மாதங்களும் எங்கள் மகிழ்ச்சியின் கடைசி மாதங்கள். அதன் பின்னர், எங்களுக்கு ஒரு நாளாவது மன நிம்மதி என்பதே கிடையாது.

நாங்கள் இருவரும் ‘ஜூபிலி காலே’ஜில் சேர்ந்த நாள் இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அன்றைய தினம் என் உள்ளத்தில் யௌவன வெறியும் மகிழ்ச்சியும் நிரம்பியிருந்தன. என் எதிரே வெற்றி என்னும் மலர் மலரக் கூடியதும், அன்பு என்னும் வெய்யில் விளையாடக் கூடியதுமான வருங்காலத்து வாழ்க்கையின் வழி திறந்திருந்தது. ஆனால் நான் வீடு திரும்பும் முன்னரே உள்ளத்தில் நம்பிக்கைக்குப் பதிலாக, பொறாமை என்னும் விஷம் தோய்ந்திருந்தது. என் வருங்காலம் மேகங்களினால் சூழப்பட்ட மாலை நேரத்தைப் போன்று மங்கலாகவும், நிலையற்றதாகவும் ஆகிவிட்டது.

இதற்குக் காரணம் நாங்கள் காலேஜில் சேர்ந்த அன்றைய தினமே, ரூபராணி என்ற ஒரு பெண்ணும் சேர்ந்ததுதான். இந்தப் பெண் அந்தக் கலாசாலையில் சேராமல் இருந்திருந்தால்?......அவள் ஒரு நொடியில் என் மன நிம்மதியை இழக்கச் செய்து விட்டாள். அவளைப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும், என் கண்களை விட்டு அவள் ஒரு கணமும் அகலக் கூடாது என்று எனக்குத் தோன்றியது.

நான் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். எத்தனையோ அழகிய பெண்களைப் பார்த்திருக்கிறேன். நல்ல நல்ல ஓவியமாக்கள் பார்த்திருக்கிறேன். ஆனால் அந்தப் பெண்ணைப் போன்ற உருவமும், மோகன சக்தியும் வாய்ந்தவர்களை இன்றுவரை நான் கண்டதில்லை. அவள் முதல் முதலில் தன் அகன்ற விழிகளால் என்னைப் பார்த்ததும் எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. அந்த அகன்ற விழிகளுக்கெதிரில் நானும் என்னுடைய திரவியங்களும் எந்த மூலை?

ஆனால் ரூபராணி என்னைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அதற்குப் பின்னர் என்னை ஒரு தடவைகூட அவள் எடுத்துப் பார்க்கவும் இல்லை. அவள் கவனம் பூராவும் வித்யாசங்கரின் மீதே இருந்தது. அவளும் மற்றப் பெண்களும் பின் வரிசையில் உட்

கார்ந்திருந்தனர். நானும் வித்யாசங்கரும் சேர்ந்தாற்போல முன் வரிசையில் எல்லாருக்கும் முன்னால் உட்கார்ந்திருந்தோம். நான் அநேக தடவை ஏதேதோ சாக்கு வைத்துக்கொண்டு, பின்புறம் திரும்பி அவளைப் பார்ப்பேன். அவள் வித்யாசங்கரின் முதுகையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பாள். ஒரு தடவை அவள் தன் பக்கத்துப் பெண் ஒருத்தியிடம் வித்யாசங்கரைச் சுட்டிக் காட்டி ஏதோ சொன்னாள். "இந்தப் பையன் மாகாணத்துக்கே முதலாவதாகத் தேறியிருக்கிறான்!" என்று சொல்லிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இதைத் தவிர அவள் வேறு என்ன சொல்லக் கிடக்கிறது? ஒரு தடவை வித்யாசங்கர் தன் பின் வரிசையில் உள்ள ஒரு பையனிடம் ஏதோ சொல்லத் தன் முகத்தைத் திருப்பினான். அப்பொழுது அவனுடைய கண்களும் ரூபாராணியினுடைய கண்களும் சந்தித்துக் கொண்டன.

ரூபாராணி தலை குனிந்து விட்டாள். வித்யாசங்கரின் முகம் 'குப்'பென்று சிவந்துவிட்டது. என் உள்ளத்தைத் தீப் பற்றியது. அப்பொழுது நானும் வித்யாசங்கரும் ஒருவரை யொருவர் இடித்துக் கொண்டு மிகவும் நெருங்கி உட்கார்ந்திருந்த போதிலும் எங்களிருவருக்கும் மத்தியில் பகைமை என்னும் கரை காண முடியாத கடல் கொந்தளிக்க ஆரம்பித்து விட்டது!

இரு நண்பர்களுக்கு மத்தியில் ஒரு அழகிய பெண் வந்து நின்று விட்டாளானால், நண்பர்களிருவரும் எவ்வளவு சீக்கிரம் பிரிந்து விடுகின்றனர் என்பது இன்று தான் எனக்கு முதன் முதலாகத் தெரிய வந்தது. அன்று யாராவது என்னிடம் வந்து வித்யாசங்கர் வேறு காலேஜுக்குப் போகப் போகிறான் என்று சொன்னால் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியா யிருந்திருக்கும், தெரியுமா? அன்று யாராவது என்னிடம் வந்து, உன்னுடைய சொத்து அனைத்தையும் கொடுத்து நீ மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறிவிட முடியும் என்று சொல்லி யிருந்தால் கண்ணை மூடிக்கொண்டு அப்படியே செய்ய ஒத்துக் கொண்டிருப்பேன்! ரூபாராணியின் அன்புக்குப் பாத்திரமாவதற்கு நான் அனைத்தையும் அர்ப்பணம் செய்யத் தயாரா யிருந்தேன். ஆனால் இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? வீணாக யோசித்து என்ன பயன்? நான் எந்த விதத்திலும் வித்யாசங்கராக ஆக முடியாதே! என்ன செய்வது? (தொடரும்)



"இத்தனை நாழி அவரோடு குலாவிக் கொண்டிருந்தீர்களே, அவர் யார் ஸார்?"
"தெரியாது, ஸார்!"

கிளிராஜ குமாரன்


ராதா

தர்மபுரி என்ற ராஜ்யத்தை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். ஆனால் அவனுக்குப் பெரிய ராணியைக் கண்டால் பிடிப்பதில்லை. ஆகையால் அவளைத் தனியாக ஒரு சின்ன வீட்டில் வைத்திருந்தான். சின்ன ராணியை அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். ஆகையால் அவளைப் பெரிய அரண்மனையில் வைத்திருந்தான்.

ஒரு தடவை ராஜா அயல் தேசத்துக்குப் போவதாக இருந்தான். போகிற சமயத்தில் சின்ன ராணியிடம் "அயல் தேசத்திலிருந்து நான் திரும்பி வருகிறபோது உனக்கு என்ன வாங்கி வரவேண்டும்?" என்று கேட்டான். சின்ன ராணி, "எனக்கு அழகான நீலக் கல் மோதிரம் ஒன்று வாங்கி வாருங்கள்!" என்றாள்.

ராஜா அப்படியே வாங்கி வருவதாக வாக்களித்தான். பிறகு பெரிய ராணியிடம் சென்று, "உனக்கு என்ன வாங்கி வரவேண்டும்?" என்று கேட்டான். "எனக்கு ஆடை ஆபரணம் ஒன்றும் வாங்கி வர வேண்டாம்; ஒரே ஒரு பஞ்சவர்ணக் கிளி மாத்திரம் வாங்கி வந்தால் போதும்" என்றாள்.

"சரி" என்று ராஜா அயல் தேசத்துக்குப் போய் அழகான நீலக் கல் மோதிரம் ஒன்றும் அழகான பஞ்சவர்ணக் கிளி ஒன்றும் வாங்கி வந்தான். கிளியைப் பெரிய ராணியிடமும், மோதிரத்தைச் சின்ன ராணியிடமும் கொடுத்து விட்டான்.



ஒரு நாள் கிளி பெரிய ராணியிடம், "அம்மா! ராஜா உன்னை இம்மாதிரி சின்ன வீட்டில் தனியாக வைத்திருக்கிறது ரொம்ப அநியாயம்! சின்ன ராணி மாதிரி உன்னைப் பெரிய அரண்மனையில் வைத்திருந்தால் என்ன? நான் இதை ராஜாவிடம் சொல்லப் போகிறேன்!" என்றது.

மனிதர்களைப் போல் கிளி பேசினதும் ராணிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ராணி, "வேண்டாம்! எனக்கு இங்கே இருப்பதனால் ஒரு கஷ்டமும் இல்லை. நீ ஒன்றும் ராஜாவிடம் போய்ச் சொல்ல வேண்டாம்!" என்றாள்.

"இல்லை, அம்மா! நான் கண்டிப்பாய் ராஜாவிடம் சொல்லப் போகிறேன்!" என்று சொல்லிவிட்டுக் கிளி, ராஜாவின் தர்பாருக்குச் சென்று, "மகாராஜா! நான் தங்களிடம் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன்" என்றது.

கிளி பேசுவதைக் கேட்டு ராஜாவும் ஆச்சரியமடைந்து, "என்ன சொல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

"பெரிய ராணிக்குக் குழந்தை பிறக்கப் போகிறது. ஆகையால் மகா ராணிக்கு எல்லா சௌகரியங்களுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று கிளி சொல்லி விட்டுப் போயிற்று.

குழந்தை இல்லை என்று ராஜா வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். ஆகையால் கிளி சொன்ன செய்தி அவனுக்கு ரொம்ப சந்தோஷத்தை அளித்தது. உடனே அவன் பெரிய ராணிக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்து கொடுப்பதற்கு உத்தரவிட்டான்.

கிளி பெரிய ராணியிடம் போய் எல்லாவற்றையும் சொல்லிற்று. ராணிக்கு வருத்தமாகப் போய்விட்டது. ராணி, "நீ எதற்காகப் போய் அப்படிச் சொன்னாய்? நீ சொன்னது பொய் என்று ராஜாவுக்குத் தெரிந்தால் எனக்குத் தண்டனை விதிக்க மாட்டாரா?" என்று கேட்டாள்.

"அம்மா! நீ ஒன்றும் பயப்பட வேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்வேன்!" என்றது கிளி.

சில நாட்களுக்குப் பிறகு கிளி மறுபடியும் தர்பாருக்குச் சென்று, "மகாராஜா! ராணிக்கு ரொம்ப அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்திருக்கிறது!" என்றது.

உடனே ராஜா, "நான் குழந்தையைப் பார்க்க விரும்புகிறேன்" என்றான்.

"மகாராஜா! தாங்கள் குழந்தையைப் பார்க்க விரும்பலாம்; ஆனால் ஜோசியர் 'குழந்தையை இருபதாவது பிறந்த நாள் அன்றைக்குத்தான் மகாராஜா பார்க்கலாம்; அதற்கு முன்னால் பார்த்தால் குழந்தைக்கு அபாயம் வரும்' என்று சொல்லியிருக்கிறார்!" என்றது கிளி.

ராஜா, "அப்படியானால் சரி; இருபது வருஷம் கழித்துப் பார்க்கிறேன்!" என்று சும்மா இருந்து விட்டான்.



"என்னங்க, இத்தனூண்டு பாத்திரத்திலே டிபன் கொண்டு போகிறீர்களே? இது போதுமா, உங்களுக்கு?"

"இது டிபன் இல்லீங்க: சாப்பாடு!"



கொஞ்சம் கொஞ்சமாக இருபது வருஷமும் முடிந்தது. கிளி ஒருநாள் தர்பாருக்குச் சென்று, "மகாராஜா! தங்கள் பிள்ளைக்கு விவாகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். கல்யாணத்தின்போது தாங்கள் புத்திரனைக் காண்பீர்கள்!" என்றது.

மகாராஜா அப்படியே அடுத்த தேசத்து ராஜகுமாரியைக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தான்.

கல்யாணத்துக்கு முந்தின நாள் கிளி பெரிய ராணியிடம், "அம்மா! இன்றைக்கு ஒரு ஆச்சரியமான சமாசாரம் உனக்குச் சொல்லப் போகிறேன்; அதை நீ ஒருவரிடமும் சொல்லக்கூடாது. நான் ஒரு நிஜக் கிளி அல்ல; ராஜகுமாரன்! ஒரு பொல்லாத வனதேவதையின் சாபத்தினால் கிளியாக மாறினேன். இருபது வருஷம் வரையில் கிளியாக இருக்கும்படி வனதேவதை சாபம் கொடுத்தது. அந்த இருபது வருஷமும் இன்றோடு முடிந்துவிட்டது!" என்றது.

கிளி இவ்வாறு சொல்லி முடித்தவுடனே, ராணி தனக்கு எதிரே கிளிக்குப் பதிலாக ஓர் ராஜகுமாரன் நிற்பதைக் கண்டாள்! ராணியின் துக்கமெல்லாம் பறந்து போய்விட்டது.

மறுநாள் மகாராஜா, பெரிய ராணியின் அரண்மனைக்கு வந்தான். இருபது வயதான ராஜகுமாரனைப் பார்த்து மிகவும் சந்தோஷம் அடைந்தான். ராஜகுமாரனுக்கும் ராஜகுமாரிக்கும் தடபுடலாக விவாகம் நடந்தேறியது.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

163. மீள்வதே நலம்!

ராமன் எய்த அம்பானது மானின் இதயத்திற் பாய்ந்தது — மாரீசன் மானின் தோற் போர்வை நீங்கினவனாய்க் கீழே விழுந்து 'ஓ' என்று அலறினான். இதைப் பார்த்த ராமனுக்கு, அடாடா, சீதை என்ன மோசத்துக்கு உள்ளாகியிருப்பாள் என்ற எண்ணம் வந்தது. உள்ளம் கலங்கிவிட்டது. அப்போதுதான் தம்பி லக்ஷ்மணன் சொன்ன யோசனையின் சாமர்த்தியம் மனதுக்குத் தெளிவாய்ப் பட்டது.

லக்ஷ்மணனை மனமார வாழ்த்துகிறான்.

• • •

அரக்கன் இட்ட கூக்குரல் திசைகளை முட்டும்படியாக அவ்வளவு உரத்த குரலோடு எழுந்தது.

ஆசை நீளத் (து)
அரற்றினன் வீழ்ந்த அந்
நீசன் மேனியை
நின்றுடன் நோக்கினான் :
மாசில் மாதவன்
வேள்வியின் வந்தமா
ரீச னே இவன்
என்பதும் தேறினான்

[ஆசை நீளத்து அரற்றினன் : திசைகளை முட்டும்படியாக அரற்றினவனாய் : வீழ்ந்த அந்நீசன் மேனியை : கீழே விழுந்த அந்த அரக்கன் மேனியை : நின்று உடன் நோக்கினான் : நின்று அப்படியே திகைத்த வண்ணமாய்ப் பார்த்தான் : இனம் தெரிந்துகொண்டான் ராமன். மாசில் மாதவன் வேள்வியில் வந்த : அந்தப் புனிதமான விசுவாமித்திர முனிவர் செய்த யாகத்தினிடை வந்த : மாரீசனே இவன் என்று தேறினான் : மாரீசனே இவ்வரக்கன் என்பதையும் தெரிந்துகொண்டான்.]

தெரிந்தவுடன் ராமன் யோசிக்கிறான்:—"என்னுடைய அம்பு இவன் மார்பில் தைத்ததும், ஒரு மாய வித்தையினால் என் குரலிலேயே வாய்





விட்டு ஒருவிதமாய்க் கூவினனே! அதன் விளைவு........."

'உழைத்த வாளி
உரம்புகப் புல்லியோன்
இழைத்த மாயையின்
என்குர லால் இசைத்(து)
அழைத்த துண்(டு) அது
கேட்டயர்(வு) எய்துமால்
மழைக்கண் ஏழை!' என்று
உள்ளம் வருந்தினன்.

[உழைத்த வாளி உரம் புக: வேதனையைக் கொடுக்கும் அம்பு மார்பில் தைக்கவும்: புல்லியோன் இழைத்த மாயையின்: இந்த அற்பன் செய்த மாய வித்தையால்: என் குரலால் இசைத்து அழைத்ததுண்டு: என் குரல்போல் ஒலிக்கும்படி தன் குரலை மாற்றிக் கொண்டு, ஏதோ துணை வேண்டுமென்று கூவிய மாதிரி அலறினன்: அது கேட்டு அயர்வு எய்துமால்: அப்படிக் கூவியதைக் கேட்டு மயங்கி வருந்துவாளே: மழைக் கண் ஏழை: நீர் மேகத்தின் குளிர்ந்த தோற்றத்தைக் கொண்ட கண்ணையுடைய சீதை.]

ராமன் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுகிறான்.

இந்த மான், மாரீசன்தான் என்று சரியானபடி முன் கூட்டியே தெரிந்து கொண்டான் லக்ஷ்மணன். அப்படியானால் என்னுடைய சக்தி இன்னதென்று தெரியாதா அவனுக்கு?

'மாற்றம் இன்னது,
மாயமா ரீசன்என்(று)
ஏற்ற முன்உணர்ந்-
தான் எனின், என்னுடை
ஆற்றல் தேறும்
அறிவினன் ஆதலால்,
தேற்று மால். இளை-
யோன்' எனத் தேறினன்.

[மாற்றம் இன்னது: மாறுவேஷமாவது இது: மாய மாரீசன் என்று: மாயம் வல்ல மாரீசன்தான் என்று: ஏற்ற முன் உணர்ந்தான்: வாய்ப்பாக முன்னமேயே தெரிந்து கொண்டான்: எனின்: இந்த விஷயத்தைப் போ உணர்ந்திருக்கும்போது: என்னுடைய ஆற்றல் தேறும் அறிவினன்: நிச்சயமாக என்னுடைய வீர்த் திறத்தை அறிந்துதானே இருப்பான்: ஆதலால் தேற்றுமால் இளையோன்: ஆகையினால் நிச்சயமாக லக்ஷ்மணன் சீதை பக்கத்தில் நின்றுகொண்டு தேறுதல் சொல்லிக் கொண்டிருப்பான். அவளை விட்டுவிட்டு இங்கே வரமாட்டான்.]

என்ன காரணத்தினலோ, இம் மாரீசன் உயிரைவிட இங்கு வந்திருக்கிறான். உயிர் விடுவது மாத்திரம் அல்ல அவனுடைய நோக்கம். வேறொரு மோசமான காரியத்தைச் சாதிப்பதும் இவன் நோக்கமாக இருக்கிறது. இவனுடைய கூக்குரலினால் ஏதோ கேடு விளையப் போகிறது.

'மாள்வ தேபொரு
ளாகவந் தான்அலன்
சூழ்வ தோர் பொருள்
உண்(டு), இவன் சொல்லினால்
மூள்வ(து) ஏதம்;
அதுமுடி யாமுனம்
மீள்வ தேநலம்
என்றவன் மீண்டனன்.

[சூழ்வதோர் பொருள் உண்டு: ஏதோ மோசடியான நோக்க மிருக்கிறது: இவன் சொல்லினால் மூள்வது ஏதம்: இவன் கூக்குரலினால் ஏற்படப்போவது ஒரு பெருங் கேடு: அது முடியா முனம்: அது பூர்த்தியாகிற தற்கு முன்னமே; மீள்வதே நலம்: திரும்பிச் செல்லுவது நல்லது: என்றவன்: என்று எண்ணியபடி ராமன்; மீண்டனன்: திரும்பிச் சென்றான்.]

மாரீசன் கூக்குரலிட்டது, தூரத்தில் தெளிவாய்க் கேட்டது. ஆனால் ராமன் காதில் அவ்வளவு தெளிவாய் விழவில்லை. இப்படிச் செய்தது ஒரு வித்தையைச் சேர்ந்தது. ஆனாலும் அந்த விதமாக ஏமாற்றும் தொனி எழுப்பிய போதிலும் ராமனுக்கு அதன் பொருள் ஒரு வகையாகத் தென்படும் படியாகவே இருந்தது. மனசில் கவலையைப் புகுத்தி விட்டது. அந்தக் கவலை கடைசி அடியில் சோகத்தோடு ஒலிக்கிறது:

மீள்வ தேநலம்
என்றவன் மீண்டனன்.



உ

சுவாமியே சரணம் ஐயப்பா!

சினிமாவிலோ, நாடகத்திலோ, வேறு எவரும் நடத்தியிராதது; நடத்த உரிமையில்லாதது; நாடக உலகிலேயே புதுமை நிறைந்தது. எமது கம்பெனிக்கே பூர்ண உரிமை பெற்றது.

நாடகக் கலாநிதி, நாடகக் கேசரி, நாடகக் கலையரசு

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையாரால்

★



சபரிமலை

ஸ்ரீ ஐயப்பன்

(நாடகம்)

கல்லிடைக்குறிச்சி

நியூ சந்திர விலாஸ் தியேட்டரில்

★

2—1—47 வியாழன் முதல் பிரதி தினமும் நடைபெறும்.

ஞாயிறு மட்டும் மாலை 7 மணிக்கும்
மற்ற நாட்களில் இரவு 9-30 மணிக்கும்

2-1-47உ முதல் நாடக வசூல் எட்டையாபுரம் பாரதியார் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழாவிற்கும், எமது தேவி சபையின் பதினான்காம் ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு 3-1-47, 4-1-47உ. நாடகங்களின் வசூல் தெய்வ கைங்கரியத்திற்கும் ஏழைகளின் அன்னதானத்திற்கும் வழங்கப்படும்.

டிக்கட்:—ரிசர்வ் கிளாஸ் ரூ. 5-0-0 1-வது கிளாஸ் ரூ. 4-0-0

வெளியூர் அன்பர்கள் முன்பணம் அனுப்பி
சீட் ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

நவாப் T. S. ராஜமாணிக்கம், ப்ரொப்ரைட்டர்.



சர்க்கரைத் தொழிலாளி

இந்தியாவின் சர்க்கரைத் தொழில் இரண்டாயிரம் ஆண்டு பழமையானது. இன்று நாட்டிலே இரண்டாவது முக்கியமான தொழில். உலகத்தில் அதிகமான சர்க்கரை உற்பத்தி செய்வது நமது நாடே!

கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டோர் சுமார் இரண்டு கோடி. சர்க்கரை ஆலைத் தொழிலாளர் 120,000. இவர்களில் 3000 பேர், தொழில் பயிற்சியில் தேர்ந்தவர். இவர்கள்தான் பிசுபிசுப்பான வெல்லத்தைக் காய்ச்சி, வடிகட்டி, பிரித்து நல்ல வெள்ளைச் சர்க்கரையாகத் தயாரிக்கிறார்கள்.

சமீபகாலத்தில் போக்குவரத்து சாதனங்களின் குறைவாலும் போதிய விளைவின்மையாலும், சர்க்கரைத் தொழில் முன்னேற்றம் சிறிது தடைப்பட்டிருக்கிறது. நல்ல போகங்கள் அமைந்தால், நம் நாட்டு உபயோகத்துக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் வேண்டிய அதிக சர்க்கரையைத் தயாரித்து விநியோகிக்க முடியும்.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல போகங்கள் தேவை என்னும் நம்பிக்கையுடன் பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/BS/3


இன்னொரு மைல்க்கல்லு கடந்தாகி விட்டது!

ப்லாஸ்டிக்குகள், ரேயன், இயந்திரக் கருவிகள், மோட்டார்கள் ஆகியவைகள் கைத்தொழில் முன்னேற்ற மார்க்கத்தில் முக்கிய மைல்க்கல்லுகளாக இருந்து வந்துள்ளன. எனினும் பாரத நாட்டுக் கைத்தொழிலடிவானில் அவைகள் பிரத்தியக்ஷப்பட்டது சமீப காலத்தில்தான். ஆனால் ரேடியோ கைத்தொழில், மலிவான விலையிலுள்ள "பீப்பிள்ஸ் ஸெட்"டுடன், வருங்கால நாடுதனில் மேன்மை யோங்கினதோர் ஸ்தானத்திற்கு உரிமை கொண்டாடுகிறது.

'தி பீப்பிள்ஸ் ஸெட்'


கவர்ச்சிகரமான அம்சங்கள்

1. சிறிய வருவாய்க்காரர்களின் சக்திக்குத்தக்காப்போல் மலிவான விலை.
2. அதிகப்படியான உழைப்பு.
3. சுலுவாக வேலை செய்விக்கலாம்.
4. குறைந்த கரண்டு செலவு.
5. வாயுமண்டல சம்பந்தமான தொந்தரவே கிடையாது.
6. கிராமபோன் ஆம்ப்ளிபையராகவும் வேலை செய்கிறது.



தி நாஷனல் ரேடியோ & எஞ்ஜினீயரிங் கோ., லிட்.

விநியோகஸ்தர்கள் — மெஸ்ஸர்ஸ் பலப்பாய் லிமிடெட்.



நாஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா.

•

மதராஸ் பிராஞ்சு :

"நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்"

362, சைனாபஜார் ரோடு

எஸ்பிளனேட்

•

சப் ஆபீஸ்கள் :

பெங்களூர் : : மதுரை

மங்கையர்களின் முக விலாசத்திற்கே

அர்ப்பணம்

செய்யப்பட்டது.



ஜாப்கோ ஸ்னோ

உங்கள் எழிலை அதிகப் படுத்த இதைவிடச் சிறந்தது வேறெதுவும் இல்லை

•

ஜயபாரதம் கோ.,

மல்லேஸ்வரம் - பெங்களூர்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜனவரி 5, 1947 4 அணா



அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள்:

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

மதராஸ் ஸிடி ஏஜண்டுகள்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும் சோல் ஏஜண்டு:

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நம்பர் 80 வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒற்றை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய சாசிக்கள் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் களைந்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள் எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் சித்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை. ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில் எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும் சன்னத்திற்கும் நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்ததை வென்றும், எல்லா நெசவுத் தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

தற்போது நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளதால், நூல் தேவையானவர்கள் தங்கள் மாகாணம் அல்லது சமஸ்தான டெக்ஸ்டைல் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோவில்
பாண்டிய நாயகம் ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி

அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேகம்

விய வருஷம் தை மாதம் 14-ம் தேதி
(27-1-47) சோமவாரம் காலை 9 முதல் 10-30 மணிக்குள்
மீன லெக்னத்தில் நடைபெறும்

இங்ஙனம்,

பொது தீக்ஷதர்கள்.